383

THE "VAKIL"—TAMIL LAW MAGAZINE—FOR THE CITIZEN

"வக்கீல்"

THE REGISTRAR OF BOOKS
6 MAY 952
MADRAS

383
2-52

இந்த இதழில்

செல்லாத சென்னைச் சட்டங்கள்

பத்திரிகைச் சட்டம்

அறநிலையப் பாதுகாப்புச் சட்டம்

உணவு தானிய விலைக் கட்டுப்பாடு உத்தரவு

விற்பனை வரி திருத்தம்

1—1—1952-ல் அமுலுக்கு வரும் தொழிற்சாலைச் சட்ட விதிகள்

ஜமீன் இனும் ஒழிப்பு விதிகள்

வழக்கும்—தீர்ப்பும்

கேள்வி—பதில்

விபரம் உள்ளே பார்க்கவும்

பொது மக்களுக்குத் தேவையான
புதிய சட்டங்களையும் கண்ட்ரோல் முதலிய
விதிகளையும் உடனுக்குடன்
விமர்சனங்களுடன்
விளக்கும்

தமிழ் சட்டப் பத்திரிகை

(மாத வெளியீடு)

1713

THE "VAKIL" ~ ஜனவரி-1952 ~ 6 அணா

டில்லி பார்லிமெண்டு என்னும்

மக்கள் சபை தேர்தல்

கும்பகோணம் தொகுதி ★ தேர்தல் தேதி 16-1-52

ஓட்டுப் போடும் நேரம்:— காலை மணி 7 முதல் 12 வரை, மாலை மணி 1 முதல் 5 வரை.

பேரன்பு பூண்ட வாக்காளர்களே!

16—1—1952 புதன்கிழமை நடைபெறவிருக்கும்

டில்லி பார்லிமெண்டு என்னும் மக்கள் சபைத் தேர்தலுக்கு

தங்கள் எல்லோருடைய அபிமானத்திற்கும் உரியவனென்று கருதி நம் தேச விடுதலைக்கு போராடி வெற்றிபெற்ற காங்கிரஸ் மகாசபை என்னை ஓர் அபேக்ஷகராக நிற்கும்படி கட்டளையிட்டிருப்பதால் அன்றையதினம் தாங்கள் சிரமத்தை பாராட்டாமல் ஓட்டுப் போடுமிடத்திற்கு தயவு செய்து தவறாமல் வந்து தங்களது உயர்ந்த வாக்குச் சீட்டுகளை எனக்காக வைக்கப்பட்டிருக்கும் **நுகத்தடி பூட்டிய இரண்டு காளை மாடுகள் அடையாளமுள்ள பெட்டியில்** நிரப்பி என்னை தேர்ந்தெடுக்கும்படி தங்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் ஊழியன்,

சி. ராமசாமி முதலியார், பி.ஏ., பி.எல்.,

காங்கிரஸ் அபேக்ஷகர், கும்பகோணம்.

சென்னை சட்ட சபை தேர்தல்

கும்பகோணம் தொகுதி

16—1—1952 புதன் கிழமை

வோட்டெடுக்கும் நேரம்:—

காலை மணி 7 முதல் 12 வரையில்

பிற்பகல் மணி 1 முதல் மாலை 5 வரையில்

அன்புமிக்க ஐயா,/அம்மா,

காங்கிரஸ் மகாசபையின் சார்பில் என்னை அபேட்சகனாக நிறுத்தியிருக்கின்றனர். நான் தங்கள் ஊழியன். நீண்ட காலமாய் தேச சேவை செய்து மக்கள் பணியே என் கடனென தொண்டாற்றி வருகிறேன். மேலும் நாட்டிற்கு உழைக்க தாங்கள் என்னை ஆதரித்து காங்கிரஸ் மகாசபையின் சின்னமாகிய **நுகத்தடி பூட்டிய இரட்டை காளைமாடுகள் போட்ட பெட்டியில்** தங்கள் வாக்குச் சீட்டுக்களை போட்டு காங்கிரசை ஆதரிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். காங்கிரஸ் மகாசபையின் வெற்றி தங்களின் வெற்றி!

தங்களன்புள்ள,

T. R. வரதன்

காங்கிரஸ் அபேட்சகர்.

சந்திரன் மார்க்கு

எவர்சில்வர் பாத்திரங்கள்

கைதேர்ந்த வேலையாட்களைக் கொண்டு மிகவும் நேர்த்தியாக செய்யப்பட்டவை.

எல்லா வீடுகளுக்கும் தேவையுள்ள ஓவல் பிளேட்டுகள், ரவுண்ட் பிளேட்கள், கரண்டிகள், ஸ்பூன்கள், வெற்றிலைப் பெட்டிகள், கூஜாக்கள், குலோபர், வாளிகள் முதலியன.

தயாரிப்பவர்கள்:

மிதிலா மெட்டாலிக் இன்டஸ்டிரீஸ்

புரோப்ரைட்டர்:

A. R. விஸ்வநாத செட்டியார்

ஷோ ரூம் பெரிய தெரு,

கும்பகோணம்.

சென்னை சட்ட சபைத் தேர்தல்

(கும்பகோணம் தொகுதி) 16—1—1952

OFFICE OF THE REGISTRAR ... MAY 1952 ... MADRAS

ஒட்டுப் போடுவதற்கான நேரம் :-
காலை 7-மணி முதல் 12-மணி வரை.
மாலை 1-மணி முதல் 5-மணி வரை.



அன்புமிக்க வாக்காளர்களே !

16-1-1952 கரவருஷ தைமீ 3௳ புதன்கிழமை நடக்கவிருக்கும் சென்னை சட்டசபைத் தேர்தலில் தங்களது மேலான வாக்கை எதிர்நோக்கி நான் சுயேச்சையாக நிற்பதால் அன்றையதினம் தாங்கள் சிரமத்தைப் பாராட்டாமல் தேர்தல் ஒட்டு போடுமிடத்திற்கு தயவு செய்து தவராமல் வந்து தங்களது உயர்ந்த வாக்கு சீட்டுகளை எனக்காக வைக்கப்பட்டிருக்கும் கூஜா அடையாளமுள்ள பெட்டியில் நிரப்பி என்னைத் தேர்ந்தெடுக்கும்படி தங்களைப் பணிவுடன் கேட்டுக் கொள்ளுகிறேன், என் கடன் பணிசெய்து கிடப்பதே.

தங்கள் ஊழியன்,

எம். ஸி. எஸ். ரெத்தினசபாபதி செட்டியார், பி.ஏ.

சுயேச்சை அபேட்சகர், கும்பகோணம்.

குறைந்த விலை! **நிறைந்த சுகம்!!**

எல்லா வாய்வுகளையும் கண்டிப்பது

மிஸ்க்காய லேகியம்

டிரேட் மார்க்கு ரிஜிஸ்டர் No. 222.

T. K. S. பவானிசங்கர் Co.,
27, தாடாளங்கோவில்,
சீர்காழி.

பொதுமக்களால் போற்றப்பட்டுவரும்

குடந்தை

லேபர் & கோ.,

தனி சுவை வாய்ந்த சோடா கலர் பானங்களை அருந்துங்கள்.

நிர்வாகி,
குடந்தை லேபர் & கோ.,
கும்பகோணம்.

சூரியன் சோப்

S 41

துணிகளை தூய்மைப் படுத்தி நீண்ட கால உழைப்பைத் தருகிறது. பார்களாகவும் கேக்கு தினுசுகளாகவும் எல்லா வியாபாரிகளிடமும் சுலபமாக கிடைக்கும் உயர்ந்த ரக சோப்பு.

தயாரிப்பாளர்கள் :—

குமரன் சோப் ஓர்க்ஸ்,

***Post Box, 44.,* ஈரோடு.**

கிளைகள்:- கோயமுத்தூர், கரூர், திருச்சி

மத்திய மக்கள் சபை (டெல்லி) தேர்தல்

கும்பகோணம், ஆடுதுரை, சாலியமங்கலம், பாபனாசம்,

அரியலூர் தொகுதிகளுக்கு

187715

சுயேட்சை அபேட்சகரான
எனக்கு தங்கள் ஓட்டை

கூஜா

சின்னப் பெட்டியில் போட்டு
ஆதரிக்குமாறு வேண்டிக்
கொள்கிறேன்.



எமது சின்னம்

உடையார்கோவில் ஆறுமுகத் தேவர் குமாரர்

ஆ. ராமையா, B. A., D. I. C., (London)

வணக்கம்

V.S. & Sons

SWEETS

குணத்திலும்
மணத்திலும்
நிகரற்றது

வி. எஸ். & ஸன்ஸ்
பெப்பர்மெண்டுகள்

தயாரிப்பவர்கள்:

தென் இந்திய பெப்பர்மெண்டு தொழிற்சாலை

கும்பகோணம்

(Estd. 1925)

“வக்கீல்”

பொதுமக்களுக்கான உயர்தர மாத சட்ட வெளியீடு

ஆசிரியர் கமிட்டி

ஸ்ரீ T. சம்பத், B. A., B. L.,
,, G. நாகராஜ பத்தர், B. A., B. L.,
,, V. தியாகராஜன், B. A., B. L.,
,, A. பார்த்தசாரதி நாயுடு, B. A., B. L.,
,, S. சாம்பசிவய்யர், B. A., B. L.
,, T. S. வெங்கடராமன், B. A., B. L.,
,, R. கிருஷ்ணமாச்சாரி, B. A., B. L.
,, R. கோபாலசாமி, B. A., B. L.,
,, C. R. வீரராகவன், M. A., B. L.,
,, R. கிருஷ்ணமூர்த்தி, B. A., B. L.,
,, P. சுந்தரேசய்யர், B. A., B. L.,
,, V. S. விஜயராகவாச்சாரி, B. A., B. L., (ஆசிரியர்)

1952 ஜனவரி முதல் “வக்கீல்” சந்தா விபரம்.

புதிய சந்தா விபரம்:— தனிப் பிரதி அணா 6. வருட சந்தா ரூ. 5. விசேஷ வருட சந்தா ரூ. 9. ஷை வெளிநாடு ரூ. 10. ஆயுள் சந்தா ரூ. 100.

சந்தாதாரர்கள் கவனிக்கவும்:— 1952 ஜனவரி முதல் “வக்கீல்” அதிகப் பக்கங்களுடனும், பல முக்கியமான பகுதிகளுடனும், வெளிவரும். அதன் பொருட்டு “வக்கீல்” சந்தா மேலே கண்டபடி திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது. 1952 ஜனவரி இதழ் முதல் புதிய சந்தா விகிதப்படி கணக்கு செய்து “வக்கீல்” இதழ்கள் அனுப்பப்படும். 1951 டிசம்பர் மாதத்தில் சந்தாதாரர்களாகச் சேர்ந்தவர்களுக்கும் புதிய சந்தா விகிதப்படிக்குள்ள சந்தாதான் கணக்கு செய்யப்படும். வருஷ சந்தாதாரர்களுக்கு 12 மாத இதழ்களும், அந்த வருடத்திய பொருள் அட்டவணையும் அனுப்பப்படும். விசேஷ வருட சந்தாதாரர்களுக்கு மேற்கண்டவை அனுப்புவதுடன் அவ்வருடத்திற்குள் “வக்கீல்” சப்ளிமெண்டுகளாக பிரசுரமாகும் 3 சட்ட புத்தகங்களும் அனுப்பப்படும். ஆயுள் சந்தாதாரர்கள் இனி சந்தா கட்டவேண்டியதில்லை. அவர்களுக்கு மேற்கண்டவை எல்லாம் அனுப்பப்பட்டுவரும்.

சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் அனுப்ப:—

மானேஜர், “வக்கீல்” காரியாலயம்
தபால் பெட்டி 26 : : கும்பகோணம்
(தென் இந்தியா)

என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.

மணியார்டர் கூப்பனில் புரியும்படி ஒவ்வொரு எழுத்தாக—பெயர்; விலாசம்; தபாலாபீஸ்; ஜில்லா—இவைகளை எழுதவும்.

“வக்கீல்”

பொது மக்களுக்கான சட்ட விஷயங்களை விளக்கும் மாதப் பத்திரிகை

மலர் 4 ஜனவரி 1952 இதழ் 1

பொருள் அடக்கம்

	பக்கம்
குறிப்புகளும்—செய்திகளும்	5
* புது ஆண்டு	
* தேர்தல்	
* அன்றும் இன்றும்—“காங்கிரஸ்”	
* செல்லாத சென்னைச் சட்டங்கள்	
புதிய சட்டங்கள்	6
பத்திரிகை அச்சகச் சட்டம்	10
வரிகள்	12
கண்ட்ரோல் - உத்தரவுகள்	14
ஜமீன் - இனம் ஒழிப்புச் சட்ட விதிகள்	17
சென்னை அறநிலையப் பாதுகாப்புச் சட்டம்	19
தொழிலாளர் பகுதி	24
வழக்கும் தீர்ப்பும்	26
அயல் நாடுகளில்	29
கேள்வியும் - பதிலும்	31

“வக்கீல்” பத்திரிகைக்கு சென்னை பிரத்தியேக ஏஜண்டு

மதராஸ் நியூஸ் ஏஜன்சி.

13 நரசிங்கபுரம் தெரு, மவுண்டுரோடு,

மதராஸ்.

வக்கீல்

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

மலர் 4 ஜனவரி 1952 இதழ் 1

குறிப்புகளும் - செய்திகளும்

புது ஆண்டு. 1952ஆம் வருடம் பிறந்து விட்டது. அத்துடன் "வக்கீல்" பத்திரிகையின் நான்காவது மலரும் இந்த இதழுடன் மலர்கின்றது. இச்சந்தர்ப்பத்தில் "வக்கீல்" பத்திரிகைக்குப் பேராதரவு அளித்து வரும் பல்லாயிரக் கணக்கான அன்பர்களுக்கு "வக்கீல்" வாழ்த்து அனுப்புவதுடன் "வக்கீலி"ன் நன்றியறிவையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

* * *

தேர்தல். இந்தியாவில் வேறு சில இடங்களில் பொதுத்தேர்தல் முடிந்துவிட்டன என்றாலும், சென்னை ராஜ்யத்தில் உள்ள தொகுதிகளுக்கு இம்மாதத்தில் தான் தேர்தல் நடக்கும். தேர்தல் சம்பந்தமாக கிளப்பப்படும் புழுதியைத் தான் பொதுமக்கள் முதலில் காண்கின்றனர். தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்களுடைய மோட்டார் கார்கள் மட்டில்தான் புழுதியைக் கிளப்பி விடுவதாக நினைக்காதீர்கள். தேர்தல் பிரசாரயந்திரங்களின் வேலையும் புழுதியைக் கிளப்புவதுதான். போட்டியிடும் அபேட்சகர்கள் முதலில் தம் தம் யோக்கியதாம்சங்களை நமக்கு அறிமுகப்படுத்துகின்றனர். இவை அதிகமாகச் சொல்லிக்கொள்ள முடியாதவர்கள் தங்கள் தங்கள் கக்ஷியின் அல்லது தலைவர்களின் யோக்கியதாம்சங்களை நமக்கு எடுத்துக் காட்டுகின்றனர். ஜயிப்பதற்கு அதுவும் போதாது என்று நினைப்பவர்கள் போட்டியிடும் எதிரிகளைப்பற்றி, 'புழுதி' கிளப்புகின்றனர். இவ்விருவகைப் புழுதிகளையும் வேறு வழியில்லாமல் சகித்துக் கொண்டிருக்கும் பொது மக்கள் என்ன செய்வார்கள் என்று பார்ப்போம்.

* * *

அன்றும் இன்றும் — "காங்கிரஸ்" நாடெங்கும் தேர்தல் நடந்து கொண்டிருக்கிறது. இன்னும் முடியவில்லை. தமிழ் நாட்டில் இனிமேல்தான் தேர்தலே ஆரம்பமாகும். அதற்குள் மற்ற ராஜ்யங்களில் நடந்த தேர்தல்களின் முடிவு துண்டு துண்டாக நமக்குத் தெரிந்து வருகிறது. இவைகளைக் கொண்டு இந்நாட்டின் பொதுமக்களுடைய கம்பீரமான அபிப்பிராயத்தை ஒருவாறு ஊகிக்கலாம். ஒன்று மட்டில் நிச்சயமாகவும் சொல்லலாம். அதாவது பொது மக்கள் முன்போல் காங்கிரசை முழுதும் நம்பிவிடவில்லை. இது என்? காரணங்கள் இருக்கின்றன. அன்று இருந்த காங்கிரசுக்கும் இன்று இருக்கும் காங்கிரசுக்கும் பொதுவாக உள்ளது அதன் பெயர் ஒன்று தான். இதை மக்கள் நன்றாகத் தெரிந்து கொண்டனர்.

அன்று ஆங்கிலேயனை அகற்றும் போரில் ஈடுபட்ட காங்கிரசை மக்கள் முழுமனதுடன் நம்பினர்; இன்று பதவிகளையும் அதிகாரத்தையும் கைப்பற்றும் வேலைமட்டில் செய்யும் காங்கிரசை மக்கள் அவ்வளவாக நம்பவில்லை. அன்று,கொள்கைக்காவும் பிறருக்காகவும் தங்கள் சொத்து சுதந்தரங்களையும் சுகபோகங்களையும் இழந்தவர்கள் அடங்கிய காங்கிரசை மக்கள் ஆதரித்தனர். இன்று பிறர் சொத்தை நாருக்காக அபகரிக்கும் குறிக்கோளையுடையவர் பலர் கலந்த காங்கிரசை மக்கள் சந்தேகிக்கின்றனர். அன்று ஆங்கிலேயரிடமிருந்து மக்களை விடுவிக்க மக்கள் காங்கிரசை நாடினர். இன்று— "காங்கிரசிலிருந்து எங்களை விடுவிக்க யாராவது வாருங்கள்"—என்று அழைப்பது போல் இருக்கிறது மக்களின் அபிப்பிராயம். "வேறு சரியான கட்சிகள் இல்லாமையால், ஏதோ தாற்காலிகமாக உங்களிடமே, இன்னும் சில காலம் சர்க்காரை ஒப்புவிக்கிறோம். உங்களை முற்றிலும் நம்பவில்லை. உங்களைக் கவனித்து வர உங்களுக்கு எதிராகவும் ஏராளமான பிரதிநிதிகளை வைத்திருக்கிறோம்" — என்று காங்கிரசைப் பார்த்துச் சொல்வதுபோல் இருக்கிறது மக்களின் வாக்கு. "காங்கிரசில் பல புல்லுருவிகள் சேர்ந்து விட்டனர் என்பது

சரி. தயவு செய்து எனக்காக அவர்கள் எல்லோரையும் இத்தேர்தலில் தேர்ந்தெடுத்து விடுங்கள். பிறகு நான் அவர்களைக் கோடரியால் வெட்டி விடுகிறேன்''—என்று கர்ஜிக்கிறார் நமது நேரு. ''ஐயா, அந்தச் சிரமத்தைத் தங்களுக்குக் கொடுக்க எங்களுக்கு மனமில்லை. நாங்களே எங்களுடைய சின்னஞ் சிறு ஆயுதங்களால்—எங்கள் வோட்டுச் சீட்டுகளால்—அப்புல்லுருவிகளை இன்றே அகற்றி விடுகிறோம்'' என்று சொல்வதுபோல் இருக்கிறது மற்ற ராஜ்யங்களில்வசிக்கும் மக்களின் 'வோட்'. தமிழ் மக்களின் அபிப்பிராயம் எப்படி இருக்கிறது கவனிப்போம்!

* * *

செல்லாத சென்னைச் சட்டங்கள்:— சென்ற மாதத்தில் இரண்டு முக்கிய விஷயங்களைப்பற்றி, சென்னை ஹைகோர்ட்டார் தீர்ப்பளித்தனர். முதலாவதாக, மதுரை, கோயமுத்தூர், தஞ்சாவூர் கரூர், போடிநாயகனூர் பொள்ளாச்சி முதலிய முனிசிபாலிட்டிகளால் சென்னைச் சர்க்கார்மீது போடப்பட்ட மனு அம்முனிசிபாலிட்டிகளுக்குச் சாதகமாயிற்று. முனிசிபாலிட்டிகளால் நடத்தப்பட்டு வரும் மின்சார சப்ளையைச் சென்னை சர்க்காரே எடுத்து நடத்துவதற்காக சென்னைச் சட்ட சபையால் 1949ல் இயற்றப்பட்ட ஒரு சட்டம் அரசியல் அமைப்புச் சட்டத்தின் 14ஆவது ஷரத்துக்கு விரோதமாக இருப்பதால் அச்சட்டம் செல்லாதென ஹைகோர்ட்டார் தீர்ப்பளித்தனர். இரண்டாவதாக, சமீபத்தில் அமுலுக்கு வந்த அறநிலையப் பாதுகாப்புச் சட்டம் என வழங்கும் இந்து மத- தர்ம பரிபாலனச் சட்டத்தின் ஷரத்துக்களில் பல, மடங்களையும் சில வகைக் கோயில்களையும் கூட, கட்டுப்படுத்தாதென, சென்னை உயர் நீதிபதிகள் தீர்ப்பளித்திருக்கின்றனர்.

ஒரு விஷயத்தைப்பற்றிய சட்டம் என்ன; அதில் அவ்வப்பொழுது ஏற்படும் மாறுதல்கள் எவை, என்று மட்டில் நேயர்கள் தெரிந்து கொண்டால் போதாது; எந்த எந்தச் சட்டங்கள் அல்லது சட்ட ஷரத்துக்கள் செல்லா என்றும் தெரிந்து கொள்வதும் மிக அவசியமாகும். இது விஷயமாக ஹைகோர்ட்டாரின் அபிப்பிராயங்களையும் அதற்குமேல் சுப்ரீம் கோர்ட்டாரின் முடிவான அபிப்பிராயங்களையும் அவ்வப்பொழுது தெரிந்து கொள்ள நேயர்களுக்கு ''வக்கீல்'' உதவி செய்யும்.

* * *

புதிய சட்டங்கள்

சுருக்கியும் - வரிசையாகவும்

1951 ஆம் வருடத்திய (மத்திய) சட்டங்கள்

[இந்திய யூனியன் பார்லிமெண்டால் நிறைவேற்றப்பட்டவை. பிராக்கெட்டுக்குள் இருப்பது ஜனாதிபதி அவர்களால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட தேதி. இதற்கு முன் உள்ள சட்டங்கள் ''வக்கீல்'' முந்திய இதழ்களில் வரிசையாகச் சொல்லப்பட்டன.]

55. காசி இந்து சர்வகலாசாலைத் திருத்தச் சட்டம். The Benares Hindu University Amendment Act — 1951. (20—10—1951) எந்த மதத்தைத் தழுவியவர்களும் இந்தக் கலாசாலையில் பேராசிரியராகவோ மாணுக்கராகவோ இருக்கலாமென்றும், வேறு சில நிர்வாக சம்பந்தமான திருத்தங்களும் செய்யப்பட்டிருக்கிறது.

56. (1951 டிசம்பர் இதழில் விளக்கப்பட்டிருக்கிறது.)

57. அலிகார் முஸ்லீம் சர்வகலாசாலை திருத்தச் சட்டம். The Aligarh Muslim University Amendment Act 1951. (29—10—1951.) எந்த மதத்தைத் தழுவியவரும் இக்கலாசாலையில் பேராசிரியராகவோ மாணுக்கராகவோ இருக்கலாமென்றும், நிர்வாக சம்பந்தமான வேறு சில திருத்தங்களும் செய்யப்பட்டிருக்கின்றன.

(58, 60, 61, ஆவது சட்டங்கள் 1951—டிசம்பர் இதழில் விளக்கப்பட்டன.)

63. அரசாங்க நிதி உதவி ஸ்தாபனச் சட்டம். The State Financial Corporations Act 1951. (31—10—1951.) சென்னை முதலிய ஒவ்வொரு ராஜ்யத்திலும் ஒரு நிதி உதவி ஸ்தாபனத்தை ஏற்படுத்திக் கொள்ள அந்தந்த ராஜ்ய சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஸ்தாபனத்தின் மூலதனம் 50 லக்ஷ ரூபாய்க்குக் குறையாமலும் 5 கோடி ரூபாய்க்கு மேற்படாமலுமிருக்கும். இத்தொகை பங்குகளாகப் (Shares) பிரிக்கப்பட்டு இவைகளில் ஒரு பகுதி ராஜ்ய சர்க்காராலும், ஒரு பகுதி ரிசர்வ் பாங்கினாலும், ஒரு பகுதி மற்றப் பெரிய பாங்கு

கள், இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி முதலியவை களாலும், நான்காவது பகுதி பொதுமக்களா லும் எடுத்துக் கொள்ளப்படும். இவ்விதம் சேர்க்கப்படும் நிதியைக்கொண்டு கைத்தொழில் செய்யும் கம்பெனிகள் முதலிய ஸ்தாபனங் களுக்குக் கடன் கொடுத்து உதவப்படும். இந் நிதியை நிர்வாகம் செய்ய ஒரு போர்டு ஏற்படுத்தப்படும்.

64. இந்தியாவை விட்டு வெளியேறிய வர்களின் பாத்தியப் பிரிவினைச் சட்டம். The Evacuee Interest Separation Act—1951. (31—10—1951) இந்தியாவை விட்டுப் பாகிஸ்தான் போனவர்களுக்கும் மற்றவர்களுக் கும் ஒரே சொத்தில் உள்ள பாத்தியதைகளைத் தனித்தனியாக்குவதற்காக இயற்றப் பட்ட சட்டம்.

65. கைத்தொழில் அபிவிருத்தி ஒழுங்குச் சட்டம். The Industries Development and Regulation Act 1951. (31—10—1951) இச்சட்டத்தில் குறிப்பிடப் பட்டிருக்கும் 37 வகை கைத்தொழில்கள் சம்பந்தமாய் மத்திய சர்க்காருக்கு ஆலோசனை சொல்ல 30 அங்கத்தினர்களுக்கு மேற்படாத ஒரு மத்திய ஆலோசனைச் சபையை ஸ்தாபித் துக் கொள்ள மத்திய சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இச்சபையில் கைத் தொழில் ஸ்தாபன முதலாளிகளும், அதில் வேலை செய்பவர்களும், அவைகளில் உற்பத்தி செய்யப்படும் சரக்குகளை உபயோகிப்பவர்களும் அது சம்பந்தப் பட்டவர்களும் பிரதிநிதிகளாக இருப்பார்கள். உற்பத்தி, லைசென்சு, விலை, தரம் முதலிய பல விஷயங்களைப் பற்றி இச் சபை ஆலோசனை சொல்லும். இரும்பு, நிலக் கரி, ஜீனி, சிமெண்டு, பேபர், ரப்பர், தோல், வனஸ்பதி, ஜவுளி, மோட்டார், சைகிள், கப்பல், ஆகாயவிமானம், கிளாஸ், ரேடியோ, மருந்து முதலிய 37 வகையான கைத்தொழில் கள் இச்சட்டத்தில் குறிப்பிடப் பட்டிருக் கின்றன.

67. ஜனப்பிரதிநிதி (இரண்டாவது) திருத்தச் சட்டம். The Representation of the People — Second Amendment—Act 1951. (31—10—1951.) 'பி' ராஜ்யங் களின் ஆதிவாசிகள் பார்லிமெண்டுக்குப் பிரதி நிதிகள் தேர்ந்தெடுப்பது சம்பந்தமான சில ஷரத்துக்கள் திருத்தப்பட்டிருக்கின்றன.

68. பார்லிமெண்டுத் தேர்தல் தடை நிவர்த்திச் சட்டம். The Parlia-

உ

மூற்று மாசரிமை மூவாது நம் மனோர் பெற்று சுகவாழ்வு பேற டைக—மற்றும் வளம்பெருக வான் சொரிய மன்பதைகள் ஓங்க அள வின்றி பல்க அறம்.

ஸ்ரீ மஹாலக்ஷ்மி தேவி
அனுக்கிரஹத்தால்

"ஆருடத்தின் மஹிமை"

உங்கள் எதிர்காலத்தைப் பற்றி பூரா ஜாதக நகலுடன் அல்லது கடிதம் எழுதும் நேரத்துடன் நியாயமான 7 கேள்விகள் எழுதி ரூ. 2/- அனுப் பினால் உங்கள் எதிர்கால உண்மைச் செய்தி உங்களை விரைவில் தேடிவந்தடையும்.

1952-ம் வருஷ மாதவாரி பலாபலன் குணநிசய பலன் ஆயுள் பூராவும்

பலாபலன் வேண்டியவர்கள் பூரா ஜாதக நகலுடன் அல்லது ஜனன கால வருஷம், மாதம், தேதி அல்லது சுமார் வயதுடன் எழுதி ரூ. 3/- மணியார்டர் அனுப்பினால் மேற்கண்ட பலாபலன் மறு தபாலில் எழுதி யனுப்பப்படும்.

திசா புக்தி பலன்

எந்த திசையானாலும், எத்தனை வருஷ திசை யானாலும், திசை பூராவிற்கும் 9 புக்திக்கும் விபரமாய் பலாபலன் எழுதி யனுப்பப்படும். தேவையுள்ளவர்கள் பூரா ஜாதக நகலுடன் ரூ. 10/- மணியார்டர் மூலம் அனுப்பவும்.

N.B:-வெளிநாட்டு நேயர்கள் இரட்டிப்புத் தொகைக்கு பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் வாங்கி யனுப்பவும்.

ஸ்ரீமஹாலக்ஷ்மி ஜியோதிஷ ஆபீஸ்
கோட்டமருதூர் - அரகண்டநல்லூர் P.O.
தெ. ஆ. ஜில்லா.

ஆடைகளை அழகு பெறச் செய்வது!

அன்னகிளி

சோப்

தயாரிப்பவர் :-

சவுத் இந்தியன் சோப் ஒர்க்ஸ்
P. B. No. 38
தஞ்சாவூர்.

ment Prevention of Disqualification Act. 1951. (31—10—1951) சர்க்காரிடமிருந்து சம்பளம் பெற்ருலும் சில ஸ்தானங்களே வகிப்பவர்கள் பார்லிமெண்ட் தேர்தலுக்கு அபேட்சகராக நிற்கலாமென்று, தடைநிவர்த்தி செய்யும் சட்டம். அவ்வித ஸ்தானங்களாவன :—நிதி கமிஷன் மெம்பர்களும் அக்கிராசனரும்; சினிமா விசாரணைக் கமிட்டி மெம்பர்களும் அக்கிராசனரும், நிலக்கரி கமிட்டித் தலைவர்; ரயில்வே லோகல் அட்வைசரிக் கமிட்டிகளின் மெம்பர்கள்; 31-3-1952-க்குள் கெடுமுடியும் வேறு கமிட்டிகளின் மெம்பர்களும் அக்கிராசனர்களும்; 8—11—1950 வரை அஸ்ஸாம் கவர்ன்மெண்ட் பிளீடராக இருந்தவர்; இந்தியா—பாகிஸ்தான் விசாரணைக் கமிஷன் மெம்பர்; பம்பாய் ரிவன்யூ டிரிபுனல் மெம்பர். மேற்கண்டவர்கள் பார்லிமெண்ட் சபைக்குப் போட்டியிடத் தடை இல்லை.

69. விவசாயத் தோட்டத் தொழிலாளர் சட்டம். The Plantation Labour Act 1951. (2—11—1951.) தேயிலை, காபி, ரப்பர், சிங்கோனு தோட்டங்கள் 25 எக்கர்களுக்குக் குறையாமலும், அதில் 30 தொழிலாளர்களுக்குக் குறையாமலும் வேலை செய்தால், அத்தொழிலாளர்களின் வேலை நேரம், விடுமுறை, சம்பளம் சுகாதாரம் முதலிய விஷயங்களை ஒழுங்குபடுத்தும் மத்திய சட்டம். இச்சட்டம் மத்திய சர்க்காரால் குறிப்பிடப்படும் தேதி முதல் அமுலுக்கு வரும். மேற்கண்ட தோட்டங்களைத் தவிர வேறு வகைத் தோட்டங்களுக்கும் இச்சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர ராஜ்ய சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இம் முக்கிய சட்டம் பின்பு விவரமாய் விளக்கப்படும்.

70. குடிபெயர்ந்தோர் கடன் ஒழுங்குச் சட்டம். The Displaced Persons—Debts Adjustment Act-1951. (7-11-1951.) பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்கு ஓடி வந்தவர்கள் கொடுக்கவேண்டிய கடன்களைக் குறித்து அவர்களுக்குப் பலவகை நிவாரணங்கள் அளிக்கும் சட்டம்.

தொழிலாளர் சேமிப்பு நிதி அவசர (மத்திய) சட்டம். (1951) The Employee's Provident Fund Ordinance 1951 பார்லிமெண்ட் கூடாததால் 5—11—1951-ல் ஜனதிபதி அவர்களால் இந்த 1951ஆம் வருடத்திய அவசர மத்தியச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது இச்சட்டபடிக்கு.

பகுத்தறிவு போட்டி-1
ரொக்க பரிசு ரூ. 1500
முடிவு தேதி 17—1—1952.

பிரவேச கட்டணம் கூப்பன் ஒன்றுக்கு அணு எட்டு வீதம் மணியார்டர் மூலம் அனுப்பவேண்டும். ஒருவர் எத்தனை கூப்பன்கள் வேண்டுமானுலும் அனுப்பலாம்.

கூப்பன் தேவையுள்ளவர்கள் கூப்பன் ஒன்றுக்கு காலணு வீதம் தேவையான கூப்பன்களுக்கு ஸ்டாம்பு மூலம் அனுப்பவும். முடிவு தேதிக்கு பிறகு வந்த கூப்பன்கள் அங்கிகாரம் செய்துகொள்ள படமாட்டாது. பாங்கில் சீலிட்டு வைத்திருக்கும் சரியான விடை முடிவு தேதிக்கு பிறகு மித்திரன் வாரப் பதிப்பில் வெளியிடப்படும் ஷை போட்டிக்கு தஞ்சை ஜில்லா கலெக்டரின் அனுமதி பெறப்பட்டிருக்கிறது.

விபரங்களுக்கு :—

லலிதா பகுத்தறிவு போட்டி

B.P. நம்பர் 1, குடவாசல் (தஞ்சை ஜில்லா)

தந்தி: FORTUNE

"வக்கீல்" பத்திரிகை ஒவ்வொரு ஆங்கில மாதம் முதல் தேதியிலேயே பிரசுரம் செய்யப்பட்டு வருகிறது. தபால் மூலம் அனுப்பப்படும் பத்திரிகை 5-தேதிக்குள் உங்களிடம் கிடைக்காவிட்டால், உடனே "வக்கீல்" காரியாலயத்திற்கு ஒரு கார்டு எழுதவும். சந்தா நம்பரையும் விலாசத்தையும் புரியும்படி எழுதவும்.

ஏஜண்டுகள் மூலம் "வக்கீல்" வாங்கிவரும் இந்தியாவிலிருக்கும் நேயர்களுக்கும் 5-தேதிக்குள் "வக்கீல்" கிடைக்காவிட்டால் ஆபீசுக்கு எழுதி தருவித்துக் கொள்ளலாம்.

சிமெண்ட், சிகரெட், எலெக்ட்ரிக் சாமான்கள், என்ஜினியரிங் சாமான்கள், இரும்பு எஃகு, காகிதம், பருத்தி, சணல், பட்டு இவை சம்பந்தமான தொழிற்சாலைகளில் ஒவ்வொரு தொழிலாளருக்கும் கொடுக்கப்படும் சம்பளத்தை (பஞ்சப்படி உள்பட) தவிர ரூபாய் 1-க்கு 1 அணா வீதம் உள்ள தொகையை முதலாளி தொழிலாளர் சேம நிதிக்காகக் (Employees' Provident Fund) கட்டிவர வேண்டும். தொழிலாளரும் அதே தொகை கட்டவேண்டும். தொழிலாளர் இஷ்டப்பட்டால் ரூபாய் 1-க்கு 1 அணா 4 பைசா வரையில் இந்நிதியில் கட்டிவரலாம். ஒவ்வொரு தொழிற்சாலையில் முதலாளியும் இத்தொகையைக் கட்டாவிட்டால் அதை அவரிடமிருந்து நிலவரியைப் போல் வசூல் செய்யச் சர்க்காருக்கு அதிகாரம் உண்டு. ஒரு தொழிற்சாலை ஆரம்பித்து, 3 வருடங்கள் முடியாமலிருந்தால் அதுவரை இந்த அவசரச் சட்டம் அத்தொழிற்சாலைக்குக் கிடையாது. இத்தொகைகளைக் கட்டுவது பற்றியும் நிர்வாகம் செய்வது பற்றியும் அவைகளைத் தொழிலாளரோ அவர் வார்சுகளோ எப்படி எப்பொழுது அடைவது என்பவை பற்றியும் விவரமாகச் சர்க்காரால் விதிகள் செய்யப்படும்.

1951-ஆம் வருடத்திய (சென்னை) சட்டங்கள்

[சென்னைச் சட்ட மன்றத்தால் நிறைவேற்றப்பட்டவை. சட்டம் சென்னை-சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்ட தேதி பிராக்கெட்டில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முன் உள்ள சட்டங்கள் "வக்கீல்" முந்திய இதழ்களில் வரிசையாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.]

29. ஆந்திர சர்வகலாசாலைச் சட்டத் திருத்தம். Andhra University Amendment Act 1951. (16-10-1951)

30. சொந்தக் காடுகள் பாதுகாப்புச் சட்டத் திருத்தம். Preservation of Private Forests Amendment Act 1951. (16-10-1951.) இச்சட்டம் 2-12-1951ல் அமுல் இழப்பதாக இருந்தது இச்சட்டத்தினால் 2-12-1953 முடிய நீடிக்கப்பட்டிருக்கிறது.

31. சென்னை மதுவிலக்குச் சட்டத் திருத்தம். Madras Prohibition Amendment Act 1951. (16-10-1951) மதுவிலக்குச் சட்டப்படி இச்சட்டத்தால் தடுக்கப்பட்ட கள், சாராயம் முதலிய போதை வஸ்துக்களை உற்பத்தி செய்யும் இடங்களிலும் விற்பனைக்காக வைத்திருக்கும் இடங்களிலும் அதிகாரிகள் எந்த நேரத்திலும் நுழைந்து சோதனை போட அதிகாரம் இருக்கிறது. இத்திருத்தச் சட்டத்தால், ஒருவர் போதை வஸ்துக்களை அருந்தி, புத்தி மாறுட்டமாக இருக்கும் இடங்களிலும், ஸ்பிரிட் முதலிய வஸ்துக்களைக் குடிக்கும்படி பக்குவம் செய்யும் இடங்களிலும் கூட இனி எந்த அதிகாரியும் எந்த நேரத்திலும் நுழைந்து சோதனை போடவும், அவ்விதம் இருப்பவர்களை அரெஸ்ட் செய்யவும், புதிய ஷரத்துக்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

32. அபின் சட்டத் திருத்தம். Opium Madras Amendment Act 1951 (23-10-1951.) இச்சட்டத்தை மீறிய குற்றத்திற்குத் தண்டனை ஒரு வருஷம் வரை சிறைவாசம் அல்லது ரூபாய் 1000 வரை அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாமென்று இருந்த செக்ஷன் 9 திருத்தப்பட்டிருக்கிறது. இதன்படி இரண்டு வருடம் வரை சிறைவாசம் அல்லது ரூபாய் இரண்டாயிரம் வரை அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம். இச்சட்டத்தை மீறும் குற்றங்களைப் பற்றிப் போலீசாரைப் போல் மதுவிலக்கு அதிகாரிகளும் புலன் விசாரணை செய்யும்படி சர்க்கார் அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கலாம்.

33. மலையாளக் குடிவார பாத்திய திருத்தச் சட்டம் (Malabar Tenancy Amendment Act 1951. (23-10-1951.)

34. டவுன் உபத்திரவத் தடுப்புச் சட்டத் திருத்தமும் புதுக்கோட்டைக்கு விஸ்தரிப்பவும். Madras Town Nuisances Act Amendment and Extension to Pudukkottai Act 1951. (6-11-1951.) சென்னை தவிர, மற்ற முனிசிபாலிட்டிகளிலும் சர்க்காரால் குறிப்பிடப்படும் இடங்களிலும் அமுலில் இருக்கும் 'டவுன் நியூசன்ஸ் ஆக்ட்' என்ற சட்டம் புதுக்கோட்டைக்கும் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. மேலும் இச்சட்டத்தின் செக்ஷன் 3 (10) திருத்தப்பட்டிருக்கிறது. இனி ஒலிபெருக்கிகளை உபயோகிப்பது பற்றி இதுவரை ஜில்லா சூப்பிரண்டண்டு அந்தஸ்துக்குக் குறையாத போலீஸ் அதிகாரிகள் தான் அனுமதி கொடுக்கலாம். இத்திருத்தச் சட்டப்படி இனி டிப்டி சூப்பிரண்டண்டு அந்தஸ்துக்குக் குறையாத எந்த போலீஸ் அதிகாரிக்கும் இந்த அதிகாரம் உண்டு.

பத்திரிகை அச்சகச் சட்டம் :: ::

[The Press Objectionable Matter) Act 1951. 1951-ஆம் வருடத்திய 56-ஆவது மத்திய சட்டம். இந்திய யூனியன் பார்லிமெண்டால் இயற்றப்பட்டு 23-10-1951ல் ஜனாதிபதி அவர்களின் அங்கீகாரம் பெற்றுள்ளது.]

சமீபகாலத்தில் செய்திப் பத்திரிகைகளால் பலத்த கண்டனத்திற்கும் ஆட்சேபனைகளுக்கும் உட்பட்டிருந்த இச் சட்டத்தின் முழுப்பெயர் "பத்திரிகை (ஆட்சேபகர விஷயங்களைக் குறித்த) சட்டம்" என்பதே. அச்சகம் (Press) வைத்திருப்பவர்களும், பத்திரிகை (News paper) அல்லது செய்தித்தாள் (News-sheet) புத்தகங்கள் முதலியவை பிரசுரம் செய்பவர்களும் கவனிக்க வேண்டிய சட்டங்களில் இது மிக முக்கியமானது.

இச்சட்டத்தில் "அச்சகம்" என்பது அச்சடிக்கும் யந்திரம், டியூப்ளிகேட்டர்கள், டைப் முதலிய எவ்வித அச்சடிக்கும் சாதனங்களையும் குறிக்கும். 'பத்திரிகை' என்பது பொதுச் செய்திகளையோ, அவைகளைப் பொறுத்த அபிப்பிராயங்களையோ பிரசுரம் செய்யும் வெளியீடுகள். தினசரி வாரப்பத்திரிகை, மாதம் இரு முறை, மாதப் பத்திரிகை எல்லாம் இதில் சேர்ந்தவை தான். 'செய்தித்தாள்' என்பது செய்திகள் அல்லது அவைகளைப் பொறுத்த அபிப்பிராயங்களைப் பிரசுரம் செய்யும், பத்திரிகை அல்லாத வெளியீடுகள்.

'ஆட்சேபகரமான விஷயங்கள்' (Objectionable matter) என்பவை கீழே விவரிக்கப்பட்டிருக்கும் விஷயங்களைக் குறிக்கும். அவையாவன:—(1) சட்ட பூர்வமாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் இந்திய அரசாங்கத்தையோ, அதில் அடங்கிய எந்த ராஜ்ய அரசாங்கத்தையோ, அல்லது எந்தப் பிரதேசத்திலும் அவர்களின் செல்வாக்கையோ, கவிழ்த்துவிடவோ, குறைத்து விடவோ, பலாத்காரத்தை அல்லது நாசவேலைகளைச் செய்யும்படியோ எவரையும் தூண்டக்கூடிய விஷயங்கள். அல்லது அவ்விதம் அவர் செய்வதற்குத் தைரிய மூட்டும் விஷயங்கள். (2) கொலை செய்யும்படியோ, நாசவேலைகளைச் செய்யும் படியோ, பலாத்காரத்தால் வேறு குற்றங்கள் செய்யும் படியோ ஒருவரைத் தூண்டக்கூடிய விஷயங்கள்; அல்லது அவ்விதம் செய்ய ஒருவருக்கு தைரிய மூட்டும் விஷயங்கள். (3) உணவு அல்லது வேறு அத்தியாவசியமான பண்டங்களைச் சேகரம் செய்வதிலோ விநியோகம் செய்வதிலோ, அல்லது அத்தியாவசியமான உத்தியோகஸ்தர்களின் சேவைகளிலோ குறுக்கிட்டு, இடைஞ்சல்கள் செய்யும்படி எவரையும் தூண்டக் கூடிய விஷயங்கள். அல்லது அவர் அவ்விதம் செய்யத் தைரிய மூட்டும் விஷயங்கள். (4) இந்திய சைனியத்தைச் சேர்ந்தவர்களையோ, போலீஸ் படையைச் சேர்ந்தவர்களையோ, அவர்களுடைய கடமைகளிலிருந்தும் அல்லது விசுவாசத்திலிருந்தும் நழுவும்படி செய்யக் கூடிய விஷயங்கள்; அல்லது அவ்விதமான படைகளைத் திரட்டுவதற்கோ, அப்படையினரின் கட்டுப்பாடுகளுக்கோ கெடுதி விளைவிக்கக் கூடிய விஷயங்கள். (5) இந்திய மக்களுக்குள், ஒரு பகுதியினருக்கும் மற்றொரு பகுதியினருக்கும் விரோதம் அல்லது துவேஷ மனப் பான்மையை அதிகரிக்கக் கூடிய விஷயங்கள். மேலே கண்ட ஐந்து விஷயங்கள் தான் ஆட்சேபகர விஷயங்கள். இவைகள் எழுத்துக்களாலோ, சின்னங்களாலோ சித்திரங்களாலோ இருந்தாலும் எல்லாம் ஒன்றுதான். அச்சகம் வைத்திருப்பவர் அல்லது பிரசுரம் செய்பவர்களுடைய எண்ணங்கள் எவ்விதமிருந்தாலும், அவர்களால் செய்யப்படும் பிரசுரங்கள் மேற்கண்ட விளைவை உண்டாக்கக் கூடியவையாக இருந்தால் அவை ஆட்சேபகரமான விஷயங்களே யாகும். 'நாசவேலை' (Sabotage) என்பது யந்திரங்கள், சரக்குகள், பாலங்கள், ரஸ்தாக்கள் போன்றவைகளை அழித்துவிடவேண்டும் அல்லது உபயோகப் படக் கூடாததாகச் செய்துவிட வேண்டுமென்ற எண்ணத்துடன் செய்யும் கெடுதிகளைக் குறிக்கும். ஆனால் ஒரு சட்டத்தைப்பற்றியோ, சர்க்காரின் கொள்கைகளைப் பற்றியோ, அவர்களின் நிர்வாகச் செய்கைகளைப் பற்றியோ, குறைபாடுகளை எடுத்துக்காட்டுவதும், அவைகள் சரி அல்ல என்று சொல்வதும் ஆட்சேபகர விஷயங்களாகா. ஆனால் சட்ட பூர்வமாக அவைகளை மாற்றும், அல்லது அவைகளுக்குப் பரிகாரம் அடையும் எண்ணத்துடனும் இவை சொல்லப் பட்டவையாக இருக்கவேண்டும். மக்களுக்குள் ஒரு பகுதியினருக்கும் வேறு பகுதியினருக்கும் விரோத மனப்பான்மையை ஏற்படுத்தும் விஷயங்களை அகற்றும் எண்ணத்துடன் அவைகளை எடுத்துக் காட்டுவதும் ஆட்சேபகரமாகாது.

நடவடிக்கைகள்.

ஆட்சேபகரமான விஷயங்களைப் பிரசுரம் செய்யும் அச்சகங்களை வைத்திருப்பவர்கள் மீதும், பத்திரிகை முதலியவை பிரசுரம் செய்ப

187715

வர்கள் மீதும் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சர்க்காருக்குத் தோன்றினால், முன் இருந்தது போல், அவர்களே நேராக எவ்வித நடவடிக்கையும் எடுத்துக் கொள்ள முடியாது. சர்க்காருக்காக, அதிகாரம் பெற்ற ஒரு அதிகாரி, ஆட்சேபகரமான விஷயங்களைக் குறித்து அச்சகம் இருக்கும் இடத்திற்கு அதிகாரமுள்ள செஷன்ஸ் ஜட்ஜிடம் ஒரு மனுக்கொடுக்க வேண்டும். அம்மனுவை, செஷன்ஸ் நீதிபதி விசாரணை செய்து, அச்சகம் வைத்திருப்பவரை ஜாமீன் கட்டும்படிக்கும் உத்தரவிடலாம். அல்லது எச்சரிக்கை செய்தும் விடலாம். ஜாமீன் தொகை அந்தந்தச் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறும் சர்க்காரின் மனுவில் குறிப்பிடப்படும் தொகைக்கு மேற்படாமலும் நீதிபதியால் நிர்ணயம் செய்யப்படும். ஜாமீன் கட்டும்படி உத்தரவிட்ட 21 நாட்களுக்குள் ஜாமீன் கட்டப்பட வேண்டும். இவ்விதம் ஜாமீன் கட்டிய அச்சகங்கள் மறுபடியும் ஆட்சேபகரமான விஷயங்களைப் பிரசுரம் செய்தால் இதைக் குறித்தும் சர்க்காரால் செஷன்ஸ் ஜட்ஜிடம் ஒரு மனுக் கொடுக்கப்படும். இம்மனுவை விசாரித்து, சர்க்கார் சொல்வது சரியானால், அச்சகத்தால் கட்டப்பட்ட ஜாமீன் தொகை பூராவையுமோ அல்லது அதன் பாகத்தையோ சர்க்காருக்குப் பறிமுதல் செய்ய நீதிபதி உத்தரவிடலாம். அல்லது மறுபடியும் 21 தினங்களுக்குள் அதிகத்தொகை ஜாமீன் கட்டும்படியும் உத்தரவிடலாம். ஆட்சேபகர விஷயங்கள் அடங்கிய பத்திரிகைகள், செய்தித்தாள்கள், புத்தகங்கள் அல்லது வேறு தஸ்தவேஜிகள் எல்லாம் பறிமுதல் செய்யப்படவும் உத்தரவிடலாம். மேற்கண்டபடி ஜாமீன் தொகைகளை முதல் தடவையிலோ, மறுபடியுமோ கெடுவுக்குள் கட்டாத அச்சகங்களின் பதிவு ரத்தாகிவிடும்; மறுபடியும் அச்சகப் பதிவுச் சட்டப்படி (Press Registration Act) பதிவு (Declaration) செய்துகொள்ள வேண்டுமானால், செஷன்ஸ் ஜட்ஜால் உத்தரவிடப்பட்ட ஜாமீன் தொகைகளை மாஜிஸ்ட்ரேட்டிடம் ஜாமீனாகக் கட்டவேண்டும். இல்லாவிட்டால் பதிவு செய்து கொள்ள முடியாது. இவ்விதம் ஜாமீன் கட்டாத அச்சகங்கள் எந்தப் பத்திரிகை, புத்தகம் முதலிய எதுவும் அச்சடிக்கவும் கூடாது. அப்படி அச்சடித்தால் இது விஷயமாகச் சர்க்காரால் மாஜிஸ்ட்ரேட்டிடம் கம்பிளெயின்ட் கொடுக்கப்பட்டு அந்த அச்சகமே சர்க்காருக்குப் பறிமுதலாக்கப்படலாம். பறிமுதல் செய்யப்பட்ட மூன்று மாதங்களுக்கும் ஜாமீன் தொகைகளைக் கட்டி அச்சகத்தை மீட்டுக் கொள்ளலாம்.

ஆட்சேபகரமான விஷயங்கள் அடங்கிய பத்திரிகைகளையும் செய்தித்தாள்களையும் பிரசுரம் செய்பவர்கள் (Publishers) மீதும் செஷன்ஸ் ஜட்ஜிடம் மேற்கண்டபடி சர்க்கார் மனுக்கொடுக்கலாம். பிரசுரம் செய்பவர்களையும் ஜாமீன் கட்டும்படி நீதிபதி உத்தரவிடலாம். ஜாமீன் கட்டிவிட்டு மறுபடியும் ஆட்சேபகரமான விஷயங்களைப் பிரசுரம் செய்பவர்கள் மீதும் முன் சொன்னபடி சர்க்கார் மனுப்போடலாம். இதை விசாரித்து ஜாமீனைப் பறிமுதல் செய்யவும் அல்லது அதிக ஜாமீன் கட்டும்படிக்கும் நீதிபதி உத்தரவிடலாம். கெடுவுக்குள் ஜாமீன் கட்டாதவர்களுடைய பதிவு (Declaration) ரத்தானதாகப் பாவிக்கப்படும். அதே பத்திரிகைக்கோ அதுபோல் வேறு பத்திரிகைக்கோ அதே நபர் மறுபடியும் பிரசுரகர்த்தாவாகப் பதிவு செய்து கொள்ள வேண்டுமானால் ஜாமீன் தொகைகளை மாஜிஸ்ட்ரேட்டிடம் கட்டிவிட்டுத் தான் பதிவு செய்து கொள்ளலாம். ஜாமீன் கட்டாதவர்களுக்கு எந்த அச்சகமும் பத்திரிகை அல்லது செய்தித்தாள் அச்சடித்துக் கொடுக்கக் கூடாது. இவ்விதியை மீறி அச்சடித்துக் கொடுக்கும் அச்சகக்காரர்கள் குற்றம் செய்பவர்களாவார்கள். இதற்கு ஒரு வருடம் வரை சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம். தண்டனை அடைந்தவர் மறுபடியும் அதே குற்றம் செய்தால் அச்சகமே சர்க்காருக்குப் பறிமுதல் செய்யப்படலாம்.

இச்சட்டப்படி செஷன்ஸ் நீதிபதியால் விசாரிக்கப்படும் மனுக்களில், அச்சகக்காரர்களோ, பத்திரிகை அல்லது செய்தித்தாள் பிரசுரம் செய்பவர்களோ தங்கள் மீதுள்ள வழக்குகளை 'ஜூரி' களின் உதவியைக்கொண்டு அந்நீதிபதி விசாரிக்க வேண்டு மென்று கேட்கலாம். அப்படியானால் ஐந்து நபர்கள் அடங்கிய 'ஜூரி' (Jury) என்ற நீதிபரிபாலன உதவியாளர் சபை ஒன்று இவ்விசாரணையில் சேர்த்துக் கொள்ளப்படும். இச்சபையில் அச்சகம் அல்லது பத்திரிகைகள் நடத்துவதில் அனுபவமுள்ளவர்கள் இருப்பார்கள். ஜூரிகள் சொல்வதை செஷன்ஸ் நீதிபதி ஒப்புக் கொண்டால் அதன்படி தீர்ப்பளிப்பார். ஒப்புக் கொள்ளாவிட்டால் அவர் இவ்வழக்கைத் தம்முடைய அபிப்பிராயத்துடன் ஹைகோர்ட்டுக்கு அனுப்பவேண்டும். ஹைகோர்ட்டார் முடிவு செய்வார்கள்.

தவிர ஆட்சேபகரமான விஷயங்கள் அடங்கியதாக அட்வகேட் ஜனரல் அபிப்பிராயம் கொடுத்

தால் அவை அடங்கிய பத்திரிகை செய்தித்தாள் புத்தகங்கள் முதலியவைகளைச் சர்க்கார் பறி முதல் செய்யலாம்.

மேலும் ஆட்சேபகரமான விஷயங்கள் அடங்கியதாகச் சந்தேகம் தோன்றும் பத்திரிகை புத்தகம் முதலியவற்றை இந்தியாவிற்குள் கொண்டு வரப்படும் போதே கஸ்டம்ஸ் அதிகாரிகள் தேக்கி வைத்து, இவைகளைச் சர்க்காருக்கு அனுப்பலாம். சர்க்காருக்குப் பறிமுதல் செய்யப்பட்ட பத்திரிகை புத்தகம் முதலியவற்றையும், பதிவில்லாமல் அச்சடிக்கப்படும் பத்திரிகை, செய்தித்தாள் முதலியவற்றையும் தபால் மூலம் எவரும் அனுப்பக்கூடாது. இவ்விதம் சந்தேகப் படப்படும் பத்திரிகை முதலியவற்றைத் தபால் அதிகாரிகளே தேக்கி வைத்துச் சர்க்காருக்கு அனுப்பலாம். சர்க்காரே இவைகளைக் கைப்பற்றி அழித்துவிடலாம். பதிவு இல்லாமல் அச்சடிக்கும் அச்சகங்களைக் கைப்பற்றச் சர்க்காருக்கு அதிகாரம் உண்டு. இவைகளைப்பற்றி செஷன்ஸ் ஜட்ஜிடம் சர்க்கார் மனுக் கொடுத்து, அச்சகங்களைப் பறிமுதல் செய்யும்படி நீதிபதி உத்தரவிடலாம். மேலும் ஜாமீன் கேட்டும் கட்டாமல் அச்சடிப்பதும் பிரசுரம் செய்வதும் குற்றமாகும். இதற்கு ரூ. 2000 வரை அபராதம் அல்லது 6 மாதம் வரை சிறைவாசம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம். இவ்விதம் சட்டவிரோதமாக அச்சடிக்கப்படும் பத்திரிகைகள் அல்லது செய்தித்தாள்களைத் தெரிந்தே விற்பனை அல்லது விநியோகம் செய்வதும் குற்றமாகும். இதற்கும் 6 மாதம் வரை சிறைத்தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம். இச்சட்டப்படி ஜாமீன் கட்டியவர்கள் மீது இரண்டு வருடங்களுக்குள் சர்க்காரால் வேறு எந்த நடவடிக்கைகளும் எடுத்துக் கொள்ளப் படாவிட்டால், மாஜிஸ்ட்ரேட்டுக்கு மனுப்போட்டு ஜாமீன் தொகையைக் கட்டியவர் அதை வாபஸ் வாங்கிக்கொள்ளலாம்.

இச்சட்டம் மத்திய சர்க்காரால் குறிப்பிடப்படும் தினத்தில் தான் அமுலுக்கு வரும். அத்தேதியிலிருந்து இரண்டு வருடங்கள்தான் அமுலில் இருக்கும்.

ரேடியோ இன்ஸ்டிடியூட்
தபால் பெட்டி நெ. 28, கும்பகோணம்.
தபால் மூலம் தமிழில் ரேடியோ, ஆம்பிளிபயர் மெகானிஸம் கற்பிக்கப்படும். விபரமறிய 2 அணு ஸ்டாம்புடன் எழுதவும்.

வரிகள்

விற்பனை வரி விதிகள் — 'வியாபார ஸ்தலம்' என்றால் என்ன?

விற்பனை வரி விதிகளின் (1939) 3-ஆவது விதியில் சில சொற்களுக்கு என்ன அர்த்தம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதில் 'வியாபார ஸ்தலம்' (Place of Business) என்றால் ஒரு வியாபாரி சரக்குகளை வாங்கும் இடங்களையும், விற்பனை செய்யும் இடங்களையும், கொள்முதல் விற்பனை இவைகளுக்கு கணக்குகள் வைத்துக் கொள்ளும் இடங்களையும் குறிக்கும் — என்று சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

(வரி விதிக்கக்கூடிய அதிகாரி யார் எந்த அதிகாரியிடம் லைசென்சு வாங்கிக் கொள்ள வேண்டும்—என்பது போன்ற பல விஷயங்கள் ஒரு வியாபாரியின் 'வியாபார ஸ்தலம்' இருக்கும் இடத்தைப் பொறுத்து இருக்கிறது.)

(16—10—1951 — சென்னை சர்க்கார் கெஜட் — ரூல் சப்ளிமெண்ட் பாகம்-I பக்கம் 557.)

அப்பீல் டிரிபுனல் ரெகுலேஷன்

விற்பனை வரி திருத்தச் சட்டப்படி புதிதாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் 'அப்பீல் டிரிபுனல்' என்ற விசேஷ கோர்ட்டுக்கு முன் நடத்தப்பட வேண்டிய நடவடிக்கைகளைக் குறித்து விதிகள் செய்துகொள்ள அப்பீல் டிரிபுனலுக்கே இச்சட்டப்படி அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை அனுசரித்து அப்பீல் டிரிபுனலால் இப்பொழுது சில விதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன:-இவ்விதிகளுக்கு அப்பீல் டிரிபுனல் ரெகுலேஷன் (1951) என்று பெயர். இவ்விதிகளில் முக்கியமானவை:-

அப்பீல் டிரிபுனலின் தலைமை ஆபீஸ் சென்னையில் இருக்கும். அங்கேதான் சாதாரணமாக எல்லா அப்பீல்களும் மனுக்களும் விசாரிக்கப்படும். ஆனால் வேறு இடங்களிலும் விசாரணை நடத்த அதிகாரமுண்டு. சர்க்கார் விடுமுறை நாட்கள்தான் அப்பீல் டிரிபுனல் ஆபீசுக்கும் விடுமுறை நாட்களாகும். அப்பீல் டிரிபுனல் முன்நடக்கும் நடவடிக்கைகள் ஆங்கிலத்தில்தான் இருக்கும். அப்பீல் அல்லது மனுக்

களை மனுதார் நேரிலோ, வக்கீல் மூலமாகவோ அப்பீல் டிரிபுனலின் காரியதரிசியிடம் தாகல் செய்யலாம். அல்லது ரிஜிஸ்டர் தபால் மூலமும் அவருக்கு அனுப்பலாம். வரி விதிக்கப்பட்டவர்களால் போடப்படும் அப்பீல் அல்லது வேறு மனுக்களில் சென்னை சர்க்காரைத்தான் எதிர் மனுதாராகச் சேர்க்க வேண்டும். சாதாரணமாக டிரிபுனல் அப்பீலில் புதிய தஸ்தவேஜுகளை தாகல் செய்யவும் சாட்சியங்கள் சொல்லவும் அனுமதிக்கப் படமாட்டாது. ஆனால் அப்பீல் அல்லது மனுவை முடிவு செய்ய இவை அவசியமானவை என்று டிரிபுனலுக்குத் தோன்றினால் அவ்விதம் செய்வதை அனுமதிக்க அதிகாரம் உண்டு. மனுதார் இறந்து போனால் 90 நாட்களுக்குள் வார்சு சேர்த்து அப்பீலை மேலே நடத்தலாம். மனுதார் இன்சால்வெண்டானால் அபிஷியல் ரிசீவர் அல்லது அபிஷியல் அசைனியே அவருக்குப் பதிலாக கட்சிக்காரராகச் சேர்த்துக் கொள்ளப்படும். அப்பீல் டிரிபுனலின் அங்கத்தினர்களின் (மெஜாரிடி) பெரும்பான்மையோரின் அபிப்பிராயப்படி அப்பீல் தீர்மானிக்கப்படும்.

(16—10—1951 — சென்னைச் சர்க்கார் செஜட்—ரூல் சப்ளிமெண்ட்—பாகம்-II பக்கம் 249.)

கூட்டுறவு பால் சப்ளை சங்கங்கள்-யூனியன் - இவைகளுக்கு முதல் மூன்று வருடங்களுக்கு விற்பனை வரி கிடையாது.

1—7—1949-க்குப்பின் ஏற்பட்ட அல்லது இனி ஏற்படும் கூட்டுறவு பால் சப்ளை சங்கங்களுக்கும் பால் சப்ளை யூனியன்களுக்கும், அவை அவை ஸ்தாபிக்கப்பட்ட தேதியிலிருந்து 3 வருடங்களுக்கு மட்டில் விற்பனை வரி கிடையாதென்று சென்னை சர்க்காரால் விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

(23—10—1951 சென்னை சர்க்கார் கெஜட் பாகம்-I பக்கம்-1515 G. O. 2333)

விற்பனை வரி மொத்த வியாபார வரி விதிப்பு விதிகள் திருத்தம்.

சென்னை விற்பனைவரி மொத்த வியாபார—வரி விதிப்பு விதிகளில் (Turn over and Assessment Rules—1939) கீழே கண்ட திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன :—

(1) **சாயம் போடும் ஒப்பந்த வேலை :—** ஒப்பந்த வேலைகளில் (Works contract) மொத்த வியாபாரத் தொகையில் கூலிக்காக அதிக பட்சமாக எவ்வளவு சதவிகிதம் தள்ளுபடி செய்து பாக்கித் தொகைக்கு விற்பனைவரி விதிக்க வேண்டுமென்பதைப் பற்றிய விதி 4(3)ல் (c c) என்று சேர்க்கப் பட்டிருக்கிறது. அதாவது சாயம் போடும் ஒப்பந்த வேலைகளில் (dyeing works contract) கூலிக்காக மொத்த வியாபாரத் தொகையில் $33\frac{1}{3}$ சதவிகிதம் குறைத்துக் கொள்ளப்படும் - என்று சேர்க்கப்பட்டிருக்கிறது.

(2) **கடலை எண்ணெய் வியாபாரிகள் :** கடலை எண்ணெய் புண்ணாக்கு உற்பத்தியாளர்கள் ரிஜிஸ்டர் செய்து கொண்டால், அவர்கள் செய்யும் கடலை எண்ணெய் மொத்த விற்பனைத் தொகையிலிருந்து கடலைச் சரக்கின் விலையை கழித்துக் கொள்ளலாமென்று விதி 5(K)ல் இருக்கிறது. இவ்விதி 'சுத்தம் செய்யப்பட்ட' கடலை எண்ணெய் (Refined groundnut oil) வியாபாரத்திற்குக் கிடையாதென்று ஒரு ஷரா சேர்க்கப்பட்டிருக்கிறது. இவர்கள் ரிஜிஸ்டர் செய்து கொள்ளவும் முடியாது. பதிவு செய்து கொண்ட கடலை எண்ணெய் உற்பத்தியாளர்கள் அனுப்பவேண்டிய நமூனா 9-ரிடர்ன் திருத்தப்பட்டிருக்கிறது.

(3) **மாதாந்தரக் கணக்குகள் 25-ம் தேதிக்குள் அனுப்ப வேண்டும் :-** மாதா மாதம் A 3 நமூனாப்படி கணக்கு அனுப்பும் வியாபாரிகள் ஒவ்வொரு மாதக் கணக்கையும் அடுத்த மாதக் கடைசித் தேதிக்குள் அனுப்ப வேண்டுமென்று இருந்த விதி 13(4) திருத்தப்பட்டு - 'அடுத்த மாதம் 25 தேதிக்கு முன்பு' கணக்கு அனுப்ப வேண்டுமென்று சேர்க்கப்பட்டிருக்கிறது.

(G- O. 2923 - 20-11-1951 சென்னைச் சர்க்கார் கெஜட் - ரூல் சப்ளிமெண்ட் - பாகம்-I பக்கம்-621.)

1951 வது வருஷத்து மதருஸ் ஹிந்துமத தர்ம பரிபாலனச் சட்டம்

யாவத்து ஷரத்துக்களும், பூரணமாகவும், தெளிவாகவும் **தமிழில்** மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன. விசேஷ குறிப்புகளும், விதிகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

13-12-51ல் சென்னை ஐகோர்ட்டு பிறப்பித்த ரிட் (Writ) விபரமுள்பட விலை ரூ. 1-12-0. (ரூ. 2. M. O. செய்தால் ரிஜிஸ்தர் தபாலில் பெறலாம்).

ஆசிரியர்: **R. கிருஷ்ணமாச்சாரி,** B.A., B.L.,
R. **ரெங்கனாதய்யங்கார்.**

16, பாபுநாயக்கன் தெரு, கும்பகோணம்.
என்ற விலாஸத்துக்கு எழுதவும்.

கண்ட்ரோல்-லைசென்ஸ்-ரேஷன்-விலை நிர்ணயம்

இதர சர்க்கார் அறிக்கைகள்

உணவுத் தானிய விலைக் கட்டுப்பாடு உத்தரவு (1951)

விலை நிர்ணயம்

சென்னை உணவுத் தானியங்களின் விலைக் கட்டுப்பாடு உத்தரவு (1951): ஏற்கனவே 1—12—1949 தேதி கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்டிருந்த சென்னை உணவுத் தானிய விலைக் கட்டுப்பாடு உத்தரவு ரத்துச் செய்யப்பட்டு, அதற்குப் பதிலாகப் புதிதாய் இந்த உத்தரவு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இப்புது உத்தரவு 2—12—1951 முதல் அமுலுக்கு வந்து விட்டது. இந்த உத்தரவில் உணவுத் தானியங்களின் விலை நான்கு விதமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அதாவது:

(1) **கிராம விலை:** Village Site price (சாக்கு இல்லாமல்) கிராமத்தில் கொள் முதல் செய்யப்படும் நெல் அரிசி மற்றத் தான்யங்களின் விலை.

(2) **மில் வாயில் விலை** (Ex-Mill price) என்பது உபரி இடங்களான தஞ்சாவூர் ஜில்லாவில் எல்லாத் தாலுக்காக்களிலும், தென் ஆற்காடு ஜில்லாவில் சிதம்பரம் தாலுகாவிலும், ஆந்திராவில் சில ஜில்லாக்களிலும் மில்காரர் அல்லது மொத்த வியாபாரிக்குக் கொடுக்க வேண்டிய நெல் அல்லது அரிசியின் விலை. இந்த விலையும் சாக்கு நீங்கலாகத்தான்.

(3) **ரயில் ஏற்று விலை.** (F. O. R. price) என்பது மேலே கண்ட உபரி இடங்களில் அதாவது தஞ்சாவூர் ஜில்லா பூராவிலும், ஆந்திராவில் சில இடங்களிலும் ரயில் வாகன்களில் ஏற்றப்பட்ட நெல் அல்லது அரிசியின் விலை. இதுவும் சாக்கு நீங்கலாக.

(4) **மொத்த விலை.** (Wholesale price) என்றால் — உணவுத் தானியக் கட்டுப்பாடு உத்தரவுப்படி லைசென்சு பெற்ற வியாபாரிகள், மில்காரர்களாக இருந்தாலும் சரி, மில்காரர்களல்லாத மொத்த வியாபாரிகளாக இருந்தாலும் சரி—நெல் அரிசி, மற்றத் தானியங்களை அதே ஜில்லாவில் உள்ளவர்களுக்கு விற்கக் கூடிய விலை. இதுவும் சாக்கு நீங்கலாகவே விற்கப்படும் தானியத்தின் அளவு எவ்வளவாக இருந்தாலும் இது தான் விலை.

கிராம விலை குறையும்: தஞ்சை ஜில்லாவிலும் சிதம்பரம் தாலுகாவிலும் (இன்னும் சில ஆந்திர ஜில்லாக்களிலும்) ஒரு மொத்த வியாபாரியின் கிடங்கிலிருந்து 3 மைலுக்குள் கிராமம் இருந்தால் இந்த உத்தரவில் கண்டபடி நெல் அல்லது அரிசிக்குக் கிராம விலை கொடுக்க வேண்டும். இதற்கு மேல் இருக்கும் இடங்களில் கிராம விலையில் ஒரு மணங்குக்கு ஒரு மைலுக்கு $4\frac{1}{2}$ தம்படி வீதம் வண்டிச் சத்தம் பிடித்துக் கொள்ளலாம். மற்ற ஜில்லாக்களில் ஒரு மில் அல்லது மொத்த வியாபாரியின் கிடங்கிலிருந்து 3 மைலுக்குள் இருந்தால்தான் கிராம விலை கொடுக்கப்படும். அதற்குமேல் உள்ள கிராமங்களில் மைல் 1-க்கு மணங்கு 1-க்கு $4\frac{1}{2}$ தம்படி வீதம் கிராம விலையில் குறைத்துக் கொள்ளலாம். (நெல் அரிசி தவிர) மற்றத் தானியங்களுக்கும் எந்த ஜில்லாவாக இருந்தாலும் மேற் கண்டபடியே).

தாமதமாகக் கொடுப்பதற்கும் விலை குறையும்: மேலும் 1951 ஆம் வருடத்திய தீவிரக் கொள்முதல் உத்தரவின் 8 வது ஷரத்தப்படி கொள்முதல் செய்யப்படும் நெல் அல்லது அரிசிக்கு மணங்கு 1க்கு அணு 6 வீதம் விலை குறையும். தமிழ் ஜில்லாக்களில் அமுலில் இருக்கவேண்டிய நெல் அரிசி விலை மட்டில் கீழே அட்டவணையாகக்கொடுக்கப்பட்டிருக்கிறது

விலைகளுடன் சேர்த்துக் கொள்ள வேண்டிய உபரித்தொகை:—(1) தஞ்சை ஜில்லாவில் "ரயில் ஏற்றுவிலை" (F. O. R. Price) என்று ஷெட்யூல் III A; III Bல் கண்டிருக்கும் விலை (2) தஞ்சை ஜில்லாவிலும் தென்னாற்காடு ஜில்லாவில் சிதம்பரம் தாலுக்காவிலும் "மில் வாயில் விலை" (Ex-Mill Price) என்று ஷெட்யூல் IV-ல் கண்டிருக்கும் விலை (3) எல்லா ஜில்லாக்களிலும் (தஞ்சை தவிர) "மொத்தவிலை" (Wholesale Price) என்று ஷெட்யூல் Vல் கண்டிருக்கும் விலை. மேற்கண்ட இந்த விலைகளுடன் (a) நெல் மணங்கு 1க்கு 0-3-6 வீதமும் அரிசி மணங்கு 1க்கு 0-5-0 வீதமும் ஒரு நிர்வாகச் சர்சார்ஜும் (b) தவிர நெல் மணங்கு 1க்கு ரூ. 1-10-0 வீதமும் அரிசி மணங்கு 1க்கு ரூ. 2-4-0 வீதமும் ஒரு உபரி விலையும்-சேர்த்துக் கொள்ளவேண்டும். மேலும் கிராம விலை தவிர மற்ற விலைகளில் அதிக வண்டிச் சத்தம், வட்டி முதலிய இனங்களுக்காக விலையை உயர்த்த ராஜ்ய சர்க்காருக்கும் சிவில் சப்ளை கமிஷனருக்கும் அதிகாரம் உண்டு.

1வது ஷெடியூல் **கிராம விலை** (Village site Price)

(நெல் 1 மணங்குக்கான விலை)

ஜில்லா	முதல் தரம் ரூ. அ.பை.	இரண்டாவது தரம் ரூ. அ.பை.	குறுவை ரூ. அ.பை.
செங்கல்பட்டு	8— 2—9	7—11—3	
தென் ஆற்காடு	8— 2—6	7—10—6	7— 6—3
வட ஆற்காடு	8— 5—3	7—13—6	
சேலம்	8—13—0	8— 5—3	
கோயமுத்தூர்	8—15—3	8— 7—9	
திருச்சிராப்பள்ளி	8— 4—9	7—12—9	7— 8—3
தஞ்சாவூர்	8—10—0	8— 2—3	7—14—0
மதுரை	8—14—6	8— 6—9	
ராமநாதபுரம்	9— 3—6	8—14—6	
திருநெல்வேலி	8—11—6	8— 3—9	

ஷெடியூல் 5 மொத்த விலை (Whole Sale Price) (விற்பனை வரி உள்பட ஒரு இம்பீரியல் மணங்கின் விலை)

	நெல் முதல் தரம் ரூ. அ. பை.	நெல் இரண்டாவது தரம் ரூ. அ. பை.	நெல் குறுவை ரூ. அ. பை.	அரிசி முதல் தரம் ரூ. அ. பை.	அரிசி இரண்டாவது தரம் ரூ. அ. பை.	அரிசி குறுவை ரூ. அ. பை.
செங்கல்பட்டு	8—11—6	8— 3—9		13— 4—9	12—9— 6	
தென் ஆற்காடு	8—11—3	8— 3—0	7—14—9	12—15—6	12— 3—9	12— 3—9
வட ஆற்காடு	8—14—0	8— 6—0		13— 3—6	12— 8—3	
சேலம்	9— 7—0	8—15—3		14— 7—9	13—12—0	
கோயமுத்தூர்	9— 8—3	9— 0—6		14— 9—6	13—14—3	
திருச்சிராப்பள்ளி	8—13—6	8— 5—3	8— 0—9	13— 2—9	12— 6—9	12— 6—9
மதுரை	9— 6—3	8—14—6		13—14—9	13— 3—6	
ராமநாதபுரம்	9—11—9	9— 6—6		14— 6—0	13—14—9	
திருநெல்வேலி.	9— 5—3	8—13—6		13—10—3	12—15—0	

ஒரு இம்பீரியல் மணங்கு.	ஷெடியூல் III A F.O.R. விலை தஞ்சை ஜில்லா கொள்முதல் ஏஜண்டுகளுக்கும் மில்காரர்களுக்கும்.	ஷெடியூல் III B F.O.R. விலை தஞ்சை ஜில்லா உற்பத்தி யாளருக்கு.	ஷெடியூல் IV மில் வாயில் விலை தஞ்சை ஜில்லா.	ஷெடியூல் V மில் வாயில் விலை தென் ஆற்காடு.
நெல் முதல் தரம்	9— 1—9	8—15—6	9— 0—9	8— 9—3
,, இரண்டாம் தரம்	8—10—0	8— 7—9	8— 9—0	8— 1—3
,, குறுவை	8— 5—9	8— 3—6	8— 4—9	7—13—0
அரிசி முதல் தரம்	13— 9—0	13— 5—6	13— 8—0	12—13—3
,, இரண்டாம் தரம்	12—13—9	12—10—6	12—12—9	12— 1—6
,, குறுவை	12—13—9	12—10—6	12—12—9	12— 1—3

சென்னை உணவுத் தானியக் கொள் முதல் உத்தரவு (1947) திருத்தம். பிரயாணிகள் கையுடன் உணவுத் தானியம் எடுத்துச் செல்லலாம்.

உண்மையான பிரயாணிகள் ஒரு வாரத்திய ரேஷன் அளவும் ரேஷனில் கொடுக்கப்படும் வகையுமுள்ள உணவுத் தானியத்தை எவ்வித அதிகாரிகளின் அனுமதியின்றியே கையுடன் எடுத்துச் செல்லலாமென்று 5ஆவது ஷரத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

(G. O. 1885—16-10-1951 சென்னைச் சர்க்கார் கெஜட் ரூல் சப்ளிமெண்ட் பாகம் II பக்கம் 249).

* * *

ரைஸ் மில்கள் லைசென்சு கட்டண தேதி

1951-ஆம் வருடத்திய ரைஸ்மில் லைசென்சு உத்தரவின்படி ஒவ்வொரு வருடமும் மார்ச்சு மாதம் 15ஆம் தேதிக்குள் அடுத்த எப்ரல் 1ஆம் தேதி ஆரம்பிக்கும் வருடத்திய லைசென்சு ரூ. 24ம் செலுத்தப்பட வேண்டும் என்று சர்க்காரால், கெடுக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

(25-9-1951. சென்னைச் சர்க்கார் கெஜட் - பாகம் I- பக்கம் 1335.)

* * *

தாவர எண்ணெய் - விலை நிர்ணயம் 1—11—1951 முதல்

தாவர எண்ணெயின் (வனஸ்பதி) உச்ச விலை சென்னை ராஜ்யம் சம்பந்தப்பட்ட வரையில் கீழே கண்டபடி நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது.

ஸோன் B...மதராஸ், குடகு, மைசூர், கொச்சி-திருவாங்கூர்.	ஒரு பவுண் டின் உச்ச விலை ரூ. அ. ப.
உற்பத்தியாளர் அல்லது அவருடைய டிஸ்ட்ரிபூடிங் ஏஜண்டால்	1—1—3
மற்றவர்கள் 36 பவுண்டு பெரிய டின்களாக விற்றால்	1—2—0
டை—சில்லறையாக டின் இல்லாமல் விற்றால்	1—2—9

டின் பாக்கிங்குடன் விற்பனை செய்யப்பட்டால்.

	டின் விலை
10 பவுண்டு டின் மொத்த விலை	11—11—6
டை சில்லறை விலை	12— 0—6
5 பவுண்டு டின் மொத்த விலை	6— 1—6
டை சில்லறை விலை	6— 4—0
2 பவுண்டு - மொத்த விலை	2— 7—6
டை சில்லறை விலை	2— 8—6
1 பவுண்டு மொத்த விலை	1— 4—0
டை சில்லறை விலை	1— 4—6

மேற்கண்ட உச்சவிலை என்பது வண்டிசத்தம் மட்டில் சேர்ந்தது. டர்மினல்டாக்ஸ், விற்பனை வரி இவைகள் சேர்ந்த தல்ல.

(S. R. O. 1672. சென்னைச் சர்க்கார் கெஜட் 4-12-51. பாகம் I பக்கம் 1633.)

* * *

"ஹார்லிக்ஸ்"—விலை நிர்ணயம்

(1)	ஹார்லிக்ஸ் 1 பவுண்டு பாட்டில் 1க்கு	ரூ.	3—10—0
(2)	டை ½ ,,	ரூ.	2— 0—0
(2a)	டை 5 ,,	ரூ.	16—13—0

(13-11-1951—சென்னைச் சர்க்கார் கெஜட்- பாகம் II பக்கம் 1535.)

* * *

கரும்பு - விலை நிர்ணயம்

1950ஆம் வருடத்திய ஜீனி-வெல்லக் கட்டுப்பாடு உத்தரவின்படி, சென்னை ராஜ்யம் சம்பந்தப்பட்ட வரையில், சர்க்கரை ஆலைகளாலும் அவர்களுடைய ஏஜண்டுகளாலும் 1951-52 வருடத்தில் வாங்கும் $82\frac{2}{7}$ பவுண்டு கொண்ட ஒரு இம்பீரியல் மணு எடையுள்ள கரும்புக்குக் குறைந்தப்பட்ட விலை ரூ. 1-12-0 ஆக மத்திய சர்க்காரால் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. அவசியமான இடங்களில் ரயில் அல்லது வண்டிச் சத்தத்திற்காகத் தேவையான தொகையை மேற்கண்ட விலையிலிருந்து குறைக்க மத்தியசர்க்காருக்கு அதிகாரம் உண்டு.

(S. R. O. 1597 - 13-11-1951 சென்னை. சர்க்கார் கெஜட் - பாகம் II பக்கம் 1535)

ஜமீன்-இனும் ஒழிப்புச் சட்ட விதிகள்

பட்டாவுக்கு மனுக் கொடுப்பது பற்றி: ஒரு ஜமீன் அல்லது இனும் கிராமம் திறப்பாக மாற்றப்பட்டு, சர்க்காரால் எடுத்துக் கொள்ளப் பட்ட விஷயம் சர்க்கார் கெஜட்டில் பிரசுரமான வுடன் எந்த எந்த நிலங்களுக்கு யார் யாருக்குச் சர்க்காரால் பட்டா கொடுக்கப்படும் என்ற ஷரத்துக்கள், அச்சட்டத்தின் செக்ஷன்கள் 11, 12, 13, 14 இவைகளில் விளக்கப்பட்டிருக் கின்றன. குடிவார பாத்தியமுள்ள ரயத்துக் களுக்கு அவரவர் நிலத்திற்கு மேற்கண்ட தேதி முதல் சர்க்காரால் ரயத்துவாரிப் பட்டா கொடுக்கப்படும்—என்று செக்ஷன் 11-ல் குறிப் பிடப்பட்டிருக்கிறது. சில நிலங்களுக்கு ஒரு ஜமீன்தாருக்கோ உள் பாத்தியதாருக்கோ அல் லது இனும்தாருக்கோ சர்க்காரால் ரயத்துவாரி பட்டா கொடுக்கப்படும். இவை என்ன என்று செக்ஷன் 12, 13, 14 இவைகளில் முறையே விவரிக்கப்பட்டிருக்கின்றன. இவர்கள் எந்தநிலங் களுக்காவது தங்களுக்குத்தான் பட்டா கொடுக்க வேண்டுமென்று கோரினுல் அவ்விஷயத்தை, செட்டில்மெண்ட் ஆபீசர்தான் ஆட்சேபனை களை விசாரித்து முடிவுசெய்ய வேண்டு மென்று செக்ஷன் 15இல் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதற்காக, அதாவது ஜமீன்தார் அல்லது இனும்தார்கள் தங்களுக்குப் பட்டா வேண்டு மென்று கோரினுல், அவர்கள் மேற்கண்ட கெஜட் விளம்பரத் தேதியிலிருந்து 90 நாட் களுக்குள் எழுத்து மூலம் செட்டில்மெண்ட் ஆபீசருக்கு ஒரு மனுப் போடவேண்டும் என்று விதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. (இது சம்பந்த மான விதிகள் 31—10—1950 தேதியுள்ள சென்னைச் சர்க்கார் கெஜட் பாகம் I ரூல் சப்ளிமெண்ட்—பக்கம் 423ல் பிரசுரம் செய்யப் பட்டிருக்கின்றன.) 90 நாட்கள் கடந்து விட்டாலும் தகுந்த காரணத்தின் பேரில் ஜமீன்தார் அல்லது இனும்தார்களுடைய பட்டாமனுவை ஏற்றுக் கொள்ள, செட்டில் மெண்ட் ஆபீசருக்கு மேற்கண்ட விதிகளால் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்விதி களுடன் இப்பொழுது ஒரு ஷரத்துச் சேர்க்கப் பட்டிருக்கிறது. அதாவது:—ஒரு ஜமீன்தார், உள் பாத்தியதாரர் அல்லது இனும்தார் தமக்குப் பட்டா கிடைக்க வேண்டுமென்று செட்டில்மெண்ட் ஆபீசருக்கு மனுப்போடாம லிருந்தால் கூட, எந்த நிலங்களுக்காவது அவர் களுக்குத்தான் ரயத்துவாரிப் பட்டா கொடுக்க வேண்டுமென்று செட்டில்மெண்டு ஆபீசருக்குத் தோன்றினுல், செட்டில்மெண்ட் ஆபீசர் தாமாகவே அவரிடம் ஒரு மனுவை வாங்கிக் கொண்டு, செக்ஷன் 15இன்படி அவருடைய பாத்தியங்களை விசாரணை செய்து, அவருக்கே பட்டாக் கொடுக்கக் கூடியதாக இருந்தால் கொடுக்கலாம்—என்று ஒரு ஷரத்து இப் பொழுது சேர்க்கப்பட்டிருக்கிறது. (G. O. 2525 — 16-10-1951 - சென்னைச் சர்க்கார் கெஜட் — ரூல் சப்ளிமெண்ட் — பாகம் I — பக்கம் 556.)

குறிப்பு:— தமக்குப் பட்டா கிடைக்கக் கூடிய நிலங்களுக்குப் பட்டா கிடைக்கவேண்டு மென்று ஜமீன்தார், உள் பாத்தியதார் அல்லது இனும்தார்கள்தான் மேற்கண்டபடி மனுச் செய்துகொள்ள வேண்டும். குடிவார பாத்திய முள்ள ரயத்துக்கள் இப்பொழுது இவ்விதம் மனுச் செய்துகொள்ள வேண்டியதில்லை.

* * *

திறப்பாக்கப்பட்ட ஜமீன் இனும் நிலங்களின் பாத்தியங்களைப் பற்றியும் மேல்வாரப் பாக்கியைப் பற்றியும் தகராறுகள்:—

ஒரு ஜமீன் அல்லது இனும் கிராமம் திறப்பாக்கப்பட்டு, சர்க்காரால் எடுத்துக் கொள்ளப்பட்ட விஷயம் சர்க்கார் கெஜட்டில் பிரசுரமான பிறகு ஏற்படக்கூடிய சில தகராறுகளை — அதாவது (1) ஒரு ரயத்து எந்தப் பசலிக்காவது கொடுக்கவேண்டிய மேல் வாரம் பாக்கியிருக்கிறதா என்றும் (2) பாக்கி இருந்தால் எவ்வளவு பாக்கி என்றும் (3) ஒரு நிலத்தின் சட்ட பூர்வமான பாத்தியமுள்ள ரயத்து யார் என்பது பற்றியும் — ஏற்படும் தகராறுகளைத் தீர்மானம் செய்ய ஜமீன் இனும் ஒழிப்புச் சட்டத்தின் செக்ஷன் 56-இன்படி செட்டில்மெண்ட் ஆபீசருக்குத்தான் அதிகாரம் இருக்கிறது. அவருடைய தீர்ப்பின் பேரில் இரண்டு மாதத்திற்குள் டிரிபுனலுக்கு அப்பீல் செய்யலாம். டிரிபுனலின் தீர்ப்பே இவ்விஷயங் களில் முடிவானது. இந்த ஷரத்துக்களை ஒட்டி இப்பொழுது விதிகள் ஏற்படுத்தப்பட் டிருக்கின்றன.

அவை சுருக்கமாக:— செட்டில்மெண்ட் ஆபீசர் என்றால் அவருடைய அதிகாரம் மாற்றப்பட்ட உதவி செட்டில்மெண்ட் ஆபீசரை யும் குறிக்கும். மேற்கண்ட தகராறுகளைப் பற்றி சம்பந்தப்பட்ட நபர் எழுத்து மூலம் செட்டில்மெண்ட் ஆபீசருக்கு மனு செய்து கொண்டால்தான் அது விசாரிக்கப்படும். மனு, கீழேகண்ட நமூனு I-ன்படி இருக்க வேண்டும். அதில் மனுதார் கையெழுத்தும் உறுதிமொழிக்

கையெழுத்துமிட்டு 12 அணு கோர்ட் பீசு ஸ்டாம்பு ஒட்டப்பட்டிருக்க வேண்டும். ஒவ்வொரு பட்டாவில் இருக்கும் நிலங்களைப் பற்றியும் தனித்தனி மனுப்போட வேண்டும். சட்ட பூர்வமான ரயத்து யார் என்பதைப் பற்றித் தகராறு இருந்தால் அதற்குத் தனியாக மனுப் போடவேண்டும். மனுவை நேரில் செட்டில் மெண்ட் ஆபீசரிடம் கொடுக்கலாம்; ரிஜிஸ்டர் தபால் மூலம் அக்னலட்ஜ்மெண்டுடனும் அனுப்பலாம். மனுவில் எவ்வளவு எதிர் மனுதார்கள் இருக்கிறார்களோ அவ்வளவு மனு நகல்களும், எஸ்டேட் மானேஜருக்கு ஒரு நகலும் அனுப்ப வேண்டும். ஒவ்வொரு எதிர் மனுதாருக்கும் அணு 8 வீதமும், ஒரே ஊரில் இருப்பவர்களுக்கு ஒருவருக்கு அணு 8 வீதமும் மற்றவர்களுக்கு அணு 4 வீதமும் நோட்டீஸ்படி மனுவுடன் அனுப்ப வேண்டும். பிறகு நோட்டீஸ் அனுப்பி, செட்டில்மெண்ட் ஆபீசரால் விசாரணை நடத்தப்படும். அவருடைய தீர்ப்பின்பேரில் டிரிபுனலுக்குச் செய்யக்கூடிய அப்பீல் மனுவுக்கு ஸ்டாம்பு ரூ. 2.

நமூனா I

1. ஜில்லா, தாலுகா, எஸ்டேட், கிராமம்:-
2. மனுதாரின் பெயரும் விலாசமும்:—
3. எதிர் மனுதார்களின் பெயர்களும், விலாசமும்:—
4. தகராறு இருக்கும் நிலங்களின் பட்டா நெ:—
5. நிலங்களின் விபரம்
   - (a) ஸ்தலப் பெயர் (இருந்தால்)—
   - (b) சர்வே செய்யப்பட்டிருந்தால் — சர்வே நெ.—
   - (c) நான்கெல்லை—
   - (d) நன்செய் புன்செய் அல்லது தோட்டம்—
   - (e) விஸ்தீர்ணம். (ஏகர் — செண்ட் அல்லது ஸ்தல அளவில்.)
   - (f) வாரக் குறைப்புச் சட்டப்படி குறைக்கப்பட்ட மேல்வார விகிதம்;
   - (g) அதற்கு முன் உள்ள மேல் வார விகிதம்:—
6. இப்பொழுது எதைப்பற்றித் தகராறு:—
7. மனுப் போடுவதற்கான காரணங்கள்:—
8. மற்ற விஷயங்கள்.—

இடம்

தேதி மனுதார் கையெழுத்து.

(30—10—1951 — சென்னைச் சர்க்கார் கெஜட் — ரூல் சப்ளிமெண்ட் — பாகம்—I பக்கம் 585.)

ஜமீனில் உள்ள காடுகள்

ஜமீன் முதலிய எஸ்டேட்டுகளில் உள்ள ஒரு நிலம் 'காட்டை'ச் சேர்ந்ததா அல்லவா என்றும், ஒரு காட்டின் எல்லை என்ன என்றும் விசாரித்து தீர்மானிக்க ஜமீன் இனும் ஒழிப்புச் சட்டத்தின் செக்ஷன் 63இன் படி செட்டில் மெண்டு ஆபீசருக்கு அதிகாரம் இருக்கிறது. அது சம்பந்தமாக இப்பொழுது சர்க்காரால் விதிகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. செட்டில்மெண்டு ஆபீசர் என்றால், அவருடைய அதிகாரம் மாற்றப்பட்ட உதவி செட்டில் மெண்ட் ஆபீசரையும் குறிக்கும். மேற்கண்ட விஷயங்களைச் செட்டில்மெண்ட் ஆபீசர் தாமாகவேயும் விசாரிக்கலாம். மனுவின் பேரிலும் விசாரிக்கலாம். மனு இவ்விதியைச் சேர்ந்த நமூனா Iன்படி இருக்க வேண்டும். 12 அணு கோர்ட் பீசு ஸ்டாம்பு ஒட்டியிருக்க வேண்டும். அத்துடன் எதிர் மனுதார்களுக்குப் படி கட்ட வேண்டும். ஒவ்வொரு எதிர் மனுதாருக்கும் மனுவின் நகல் கொடுக்க வேண்டும். செட்டில் மெண்ட் ஆபீசருடைய தீர்ப்பின் பேரில் டைரெக்டர் ஆப் செட்டில்மெண்ட் என்ற அதிகாரிக்கு அப்பீல் உண்டு. இதற்கு ஸ்டாம்பு ரூ. 2.

(30—10—1951 சென்னைச் சர்க்கார் கெஜட் பாகம் I ரூல் சப்ளிமெண்ட்—583.)

* * *

கிராம உத்தியோகஸ்தர்களுக்கு ஜமீன் இனும் ஒழிப்புச் சட்ட செட்டில்மெண்ட் ஆபீசரும் அபராதம் விதிக்கலாம்.

சென்னை, பரம்பரைக் கிராம உத்தியோகஸ்தர்கள் சட்டப்படி (1895 ஆம் வருடத்திய 3ஆவது சென்னைச் சட்டப்படி) 'கலெக்டர்' கிராம உத்தியோகஸ்தர்களுக்கு எவ்விதம் அபராதம் விதிக்கலாமோ, அவ்விதமே ஜமீன் இனும் ஒழிப்புச் சட்டத்தின் செக்ஷன் 5 (1) ன்படி நியமிக்கப்படும் செட்டில்மெண்ட் ஆபீசர்களும், அவர்களின் கீழே வேலை செய்யும் உதவி செட்டில்மெண்ட் ஆபீசர்களும் கிராம உத்தியோகஸ்தர்களுக்கு அபராதம் மட்டில் விதிக்கலாமென்று அவ்வதிகாரிகளுக்குச் சர்க்காரால் அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது.

[G. O. 2900 - 20—11—1951 சென்னைச் சர்க்கார் கெஜட்—பாகம் I பக்கம் 1655.]

சென்னை அறநிலையப் பாதுகாப்புச் சட்டம்

இச்சட்டத்தின் சில ஷரத்துக்கள் செல்லாதென ஹைகோர்ட் தீர்ப்பு.

சமீபத்தில் சென்னை சட்ட சபையால் இயற்றப்பட்டு 30-9-1951ல் அமுலுக்கு வந்த சென்னை இந்து மத தர்ம பரிபாலனச் சட்டத்தின் சில ஷரத்துக்கள் செல்லாதென 13-12-1951ல் சென்னை ஹைகோர்ட்டார் சில வழக்குகளில் தீர்ப்பளித்திருக்கின்றனர். மடாலயங்களைப்பற்றிய இச்சட்ட ஷரத்துக்களில் சிலவும், கோயில்களைப் பற்றிய ஷரத்துக்களில் சிலவும் இத்தீர்ப்பின்படி செல்லாத ஷரத்துக்களாயின.

ஷிரூர் மடாதிபதி அவர்களின் மனு:— சென்னை ராஜ்யத்தில் தென் கன்னடம் ஜில்லாவிலுள்ள ஷிரூர் மடத்திற்கு ஒரு 'ஸ்கீம்' அதாவது ஏற்பாடு அல்லது திட்டம் தயாரிப்பதற்காக இந்து மததர்ம பரிபாலன போர்டார் ஆரம்பித்தனர். இதைத் தடுக்கவே ஷிரூர் மடாதிபதி அவர்கள் சென்னை ஹைகோர்ட்டுக்கு 'ரிட்' மனு செய்து கொண்டார். மடாதிபதிகள் "டிரஸ்டிகளா"க மாட்டார்கள் என்றும், மடாதிபதிகள் மீதும் மடங்கள் மீதும் ஆதிக்கம் அல்லது மேன்பார்வை ஏற்படுத்தும் இச்சட்ட ஷரத்துக்கள் பலவற்றை இயற்ற சென்னைச் சட்ட சபைக்கு அதிகாரமில்லை என்றும் ஆகையால் அவை செல்லாதென்றும் நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டனர். மடங்களின் வரும்படியில் 5 சதவிகிதத்திற்கு மேற்படாமல் ஒவ்வொரு வருடமும் அவர்கள் சர்க்காருக்கு கட்டிவரவேண்டுமென்ற செக்ஷன் 76 (1)ல் கண்டிருப்பது ஒரு 'வரி' ஆகுமென்றும் இவ்வித 'வரி'களை விதிக்கக்கூடாதென்று அரசியல் அமைப்புச் சட்டத்தின் ஆர்டிகிள் 27 என்ற ஷரத்து தடைசெய்கிறதென்றும், ஆகையால் இவ்வரி செல்லாதென்றும் நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டனர். அரசியல் அமைப்புச் சட்டத்தின் ஆர்டிகிள் 27 என்பது பின் வருமாறு:— "ஒரு குறிப்பிட்ட மதத்தை அல்லது மதப்பிரிவை விருத்திசெய்யவோ பராமரிக்கவோ மட்டில் விதிக்கப்படும் வரிகளைக் கொடுக்கும்படி எவரையும் வற்புறுத்த அரசாங்கத்திற்கு உரிமை இல்லை" என்று இருப்பதால், இந்து மத பரிபாலனத்திற்காக மட்டில் விதிக்கப்படும் இவ்வரியை எவரும், இந்துகூட, கொடுக்க வேண்டியதில்லை என ஏற்படுகிறது.

சிதம்பரம் ஸ்ரீ சபா நாயகர் கோயில் பொது தீக்ஷிதர்களின் மனு. சிதம்பரம் கோயிலுக்கு ஒரு நிர்வாக அதிகாரி நியமிக்கப்படவேண்டுமென, இந்து மத பரிபாலன போர்டார் செய்த உத்தரவை ரத்து செய்ய வேண்டுமென பொது தீக்ஷிதர்களுக்காகப் போடப்பட்ட 'ரிட்' மனுவின் பேரிலும் ஹைகோர்ட்டாரால் தீர்ப்பளிக்கப்பட்டது. மடங்கள் சம்பந்தப்பட்டவரை எந்த ஷரத்துக்கள் செல்லாதோ அவை கோயில்கள் சம்பந்தப்பட்டவரையிலும்கூட செல்லாதென நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டனர். மேலும் பொது தீக்ஷிதர்கள் என்பவர்கள் ஒரு "மத வகுப்பினர்கள்" (Religious denomination) ஆவார்கள் என்றும், அரசியல் அமைப்புச் சட்டத்தின் 26 ஆவது ஷரத்துப்படி (ஆர்டிகிள்) எந்த மதவகுப்பினரும் தங்கள் தங்கள் மத ஸ்தாபனங்களையும் தர்ம ஸ்தாபனங்களையும் ஸ்தாபித்துக் கொள்ளலாமென்றும், அவைகளுக்காக ஸ்தாவர ஜங்கமசொத்துக்கள் வாங்கியும் நிர்வாகம் செய்தும் வரவும் அவர்களுக்கு உரிமை உண்டென்றும் இருக்கும் ஜீவாதார உரிமைக்கு மாறாக இருக்கும் சென்னை இந்து மத தர்ம பரிபாலனச்சட்ட ஷரத்துக்கள் செல்லாதெனவும் நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டு, சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் கோயிலுக்கு நிர்வாக அதிகாரியை நியமிக்கக் கூடாதென்று தடை உத்தரவு பிறப்பித்தனர்.

* * *

இச்சட்டத்தின் முக்கிய அம்சங்கள் "வக்கீல்" 1951 அக்டோபர் மாத இதழிலும், இச்சட்டப்படி அதிகாரிகளிடம் கொடுக்கக் கூடிய மனுக்கள், அப்பீல்கள், அவைகளுக்கான ஸ்டாம்பு கட்டணம் முதலியன அடங்கிய விபரம் "வக்கீல்" 1951 நவம்பர் இதழிலும் விளக்கப்பட்டன. அதிகாரிகள் தாமாகச் செய்யும் உத்தரவுகளின்மீது அப்பீல் முதலிய நடவடிக்கை விபரம் கீழே அட்டவணையாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

எந்தச் செக்ஷன்படி	உத்தரவு செய்யும் அதிகாரி	விஷயம்	யார் அப்பீல் செய்யலாம்
48 (1)	கோவில் டிரஸ்டிகள்	பரம்பரைப் பாத்தியமில்லாத கோயில் உத்தியோகஸ்தர்களேயும், ஊழியக்காரர்களேயும், நிலேயாகவோ, தற்காலிகமாகவோ நியமிக்கலாம்.	அப்பீல் கிடையாது
48 (3)	ஷை	வார்சு பாத்தியம் உள்ள கோயில் உத்தியோகம் அல்லது ஊழியருடைய ஸ்தானம் காலியாக இருந்து யார் வார்சு என்று விவாதம் ஏற்பட்டாலும், வார்சு பாத்தியமுள்ளவர் மைனராக இருந்து அவ்வேலேபார்க்கத் தகுதியும் இஷ்டமும் உள்ள கார்டியன் இல்லாவிட்டாலும் யார் கார்டியன் என்ற சண்டை இருந்தாலும், பரம்பரை பாத்திய ஊழியர் 'சஸ்பெண்ட்' செய்யப்பட்டிருந்தாலும்—தாற்காலிகமாக அவர் வேலேயைச் செய்ய ஒருவரை நியமிக்கலாம்.	உத்தரவால் பாதிக்கப் பட்டவர்
49	ஷை	கோயில் உத்தியோகஸ்தர்களேயும் ஊழியர்களேயும்— பரம்பரைப் பாத்தியமுள்ளவர்களாஞலும் சரி பரம்பரைப் பாத்தியம் இல்லாதவர்களாஞலும் சரி—சட்டப்படி— விசாரணே செய்து அபராதம் விதிக்கலாம்; 'சஸ்பெண்ட்' செய்யலாம்; அல்லது நீக்கலாம்; தள்ளிவிடலாம்.	தண்டிக்கப்பட்ட உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர்
83	கோயில் நிர்வாக அதிகாரி (Executive officer)	கோயில் உத்தியோகஸ்தர்களேயும் ஊழியர்களேயும் நிலேயாகவோ தாற்காலிகமாகவோ செக்ஷன் 48 ல் கண்டபடி நியமிக்கலாம் அல்லது செக்ஷன் 49ல் கண்டபடி தண்டிக்கலாம்.	பாதிக்கப்பட்டவர்
51	பிரதேசக் கமிட்டி Area committee	அக்கமிட்டிக் குட்பட்ட கோயிலின் 'திட்டம்'—அதாவது அக்கோயில் எந்த எந்த விஷயங்களுக்காக எவ்வளவு தொகைகள் செலவு செய்யப் படவேண்டுமென்ற செலவு வீதத்தை நிர்ணயம் செய்யும் உத்தரவு.	டிரஸ்டி அல்லது பற்றுள்ள எவரும்
70	ஷை	அக்கமிட்டிக் குட்பட்ட கோவிலின் வருடாந்தர 'பட்ஜெட்' என்ற உத்தேச வரவு செலவுத் திட்டத்தை நிர்ணயம் செய்யும் உத்தரவு.	டிரஸ்டி
31	டிப்டி கமிஷனர்	ஒரு மதஸ்தாபனத்தின் உபரி வருமானங்களேச் செக்ஷன் 59ல் கண்ட உபயோகங்களுக்காகச் செலவு செய்யும்படி உத்தரவிடலாம்.	பற்றுள்ள எவரும்
45	ஷை	பிரதேசக் கமிட்டிக்குட்பட்ட கோயில் டிரஸ்டியை, 'சஸ்பெண்ட்' செய்யலாம்; நீக்கலாம்; தள்ளிவிடலாம்; (பரம்பரைப் பாத்தியமுள்ள டிரஸ்டிகளேயும், பரம்பரைப் பாத்தியம் இல்லாத டிரஸ்டிகளேயும் இவ்விதம் செய்யலாம்)	பாதிக்கப்பட்ட டிரஸ்டி

அப்பீல் முதலிய நடவடிக்கை விபரம்.

யாருக்கு அப்பீல் செய்யவேண்டும்	அப்பீல் செய்ய கெடு	அப்பீலுக்கு ஸ்டாம்பு கட்டணம்	இரண்டாவது அப்பீலுண்டா	அதே விஷயமாய் சிவில் கோர்ட்டில்தாவா செய்யலாமா
				முடியாது
டிப்டி கமிஷனர்	1 மாதம்	ரூ. 2		ஷை
டிப்டி கமிஷனர்	1 மாதம்	ரூ. 2	பரம்பரைப் பாத்தியம்உள்ளவர்கள் மட்டில் இரண்டாவது அப்பீல் கமிஷனருக்குச் செய்யலாம் இதற்கு கெடு 1 மாதம் அப்பீல் கட்டணம் ரூ. 2	ஷை
டிரஸ்டி சபைக்கு Board of Trustees	1 மாதம்	ரூ. 2	டிரஸ்டி சபையின் உத்தரவின் பேரில் கமிஷனருக்கு அப்பீல் உண்டு. 1 மாத கெடு கட்டணம் ரூ. 2	கிடையாது
டிப்டி கமிஷனர்	1 மாதம்	ரூ. 20	இல்லே	முடியாது
டிப்டி கமிஷனர்	1 மாதம்	ரூ. 10	இல்லே	முடியாது
கமிஷனர்	2 மாதம் (கெஜட் பிரசுரத் தேதியிலிருந்து)	ரூ. 25	இல்லே	கிடையாது
கமிஷனர்	1 மாதம்	ரூ. 25	இல்லே	கிடையாது

எந்தச் செக்ஷன்படி	உத்தரவு செய்யும் அதிகாரி	விஷயம்	யார் அப்பீல் செய்யலாம்
46 (2)	ஷை	பரம்பரைப் பாத்தியமில்லாத டிரஸ்டி கிரிமினல் கோர்ட்டில் தண்டனை அடைந்திருந்தாலும், இன்சால்வெண்டாக்கப்பட்டாலும்—அவரைப் பதவியிலிருந்து நீக்கலாம்	பாதிக்கப்பட்ட டிரஸ்டி
46 (3)	ஷை	பரம்பரைப் பாத்தியமுள்ள டிரஸ்டியை மேற்கண்ட காரணங்களுக்காக நீக்கலாம்	ஷை
47	ஷை	பரம்பரைப் பாத்தியமுள்ள டிரஸ்டியின் ஸ்தானம் காலியானல் அதற்குச் செக்ஷன் 47 ன் படி ஒருவரைத் தாற்காலிகமாக டிரஸ்டி வேலையைச் செய்யும் படி நியமிக்கலாம்.	ஷை
19 (1)	கமிஷனர்	டிப்டி கமிஷனர் அல்லது உதவிக் கமிஷனரிடம் இருக்கும் நடவடிக்கையைத் தாமே வரவழைத்துக் கொள்ளலாம்.	பாதிக்கப்பட்டவர்
19 (2, 3, 4)	ஷை	ஒரு பிரதேசக் கமிட்டி டிப்டி கமிஷனர் அல்லது உதவிக் கமிஷனர் தம் அதிகாரங்களைச் செலுத்தா விட்டாலும் தம் கடமையைச் செய்யாவிட்டாலும்—அவைகளைக் கமிஷனரே செய்யலாம்.	பாதிக்கப்பட்டவர்
29	ஷை	ஒரு மத ஸ்தாபனத்தின் சொத்துக்களைக் கிரயம் அல்லது அடமானம் செய்வது அல்லது 5 வருடங்களுக்கு மேற்பட்ட குத்தகைக்குக் கொடுப்பது சம்பந்தமாய் அனுமதி கொடுக்கலாம்.	டிரஸ்டி அல்லது பாதிக்கப் பட்டவர்
45	ஷை	பிரதேசக் கமிட்டிக்குட்படாத கோயில் டிரஸ்டியை 'சஸ்பெண்ட்' செய்யலாம்; நீக்கலாம்; தள்ளலாம்.	பாதிக்கப்பட்ட டிரஸ்டி
47	ஷை	டிரஸ்டி அல்லது வேறு எவரும் ஒரு மத ஸ்தாபனத்திற்கு நஷ்டமுண்டாக்கியதாக ஆடிட் ரிபோர்ட்டிலிருந்து ஏற்பட்டால் — அவர் அத்தொகையைக் கையை விட்டுச் செலுத்தவேண்டுமென்று (Surcharge) உத்தரவிடலாம்.	டிரஸ்டி அல்லது பாதிக்கப்பட்ட நபர்
34 (3)	கலெக்டர்	தேவதாசி ஊழியத்திற்காக தேவதாசிக்கு நிலம் அல்லது நிலத்தின் வருமானம் கொடுக்கப்பட்டிருந்தால் — அந்நிலத்தை யாதொரு ஊழியமும் செய்யாமலே தேவதாசி நிலங்களையோ மகளுக்களையோ அனுபவிக்கலாம், ஆனல் அவ்வித நிலங்களுக்குத் தேவதாசி எவ்வளவு குத்தகைத் தொகை கொடுக்கவேண்டுமென்ன கலெக்டர் தீர்மானம் செய்யலாம்.	பாதிக்கப்பட்டவர்

யாருக்கு அப்பீல் செய்யவேண்டும்	அப்பீல் செய்ய கெடு	அப்பீலுக்கு ஸ்டாம்பு கட்டணம்	இரண்டாவது அப்பீல் உண்டா.	அதே விஷயமாய் சிவில் கோர்ட்டில் தாவாசெய்யலாமா
கமிஷனர்	1 மாதம்	ரூ. 25	இல்லை	கிடையாது
ஷை	ஷை	ஷை	ஷை	ஷை
ஷை	ஷை	ஷை	ஷை	ஷை
சர்க்கார்	3 மாதம்	ரூ. 20		
சர்க்கார்	3 மாதம்	ரூ. 20		
சர்க்கார்	3 மாதம்	ரூ. 15		
சர்க்கார்	1 மாதம்	ரூ. 25		
சர்க்கார்	30 நாள்	ரூ. 20		சர்க்காருக்கு அப்பீல் செய்வதற்குப் பதிலாக கோர்ட்டில் 30 நாட்களுக்குள் கமிஷனருடைய உத்தரவை மாற்ற மனுப் போடலாம். இதற்கும் ஸ்டாம்பு ரூ. 20 தான்.
ரிவன்யூ போர்ட்	3 மாதம்	0-12-0	இல்லை	நிலத்தையோ வருமானத்தையோ யார் அனுபவிக்க உரிமை உள்ளவர் என்பதைப்பற்றி மட்டில் சிவில் கோர்ட்டில் தாவா செய்யலாம்.

தொழிலாளர் பகுதி

[இப்பகுதியில் தொழிற்சாலைச் சட்டம், ஷாப் சட்டம், தொழில் தகராறு சட்டம், குறைந்த பட்சக் கூலிச் சட்டம் முதலியவை பற்றிய சட்ட விஷயங்கள் விளக்கப்படும்.]

1-1-1952 முதல் அமுலுக்கு வரும் தொழிற்சாலைச் சட்ட விதிகள்

கீழே கண்ட தொழிற்சாலைச் சட்ட விதிகள் 1-1-1952 முதல் அமுலுக்கு வருமென சென்னைச் சர்க்கார் அறிக்கை செய்திருக்கின்றனர்.

(1) விதிகள் 29 முதல் 33 வரை:— எல்லாத் தொழிற்சாலைகளிலும் அமுலுக்கு வரும். (இவ்விதிகள் தொழிற்சாலைகளில் இருக்க வேண்டிய செயற்கை வெளிச்சத்தைப் பற்றியவை.)

(2) விதி 53:— இவ்விதியில் 1 முதல் 5 ஷெட்யூல்களில் கண்ட யந்திரங்களுக்கு மட்டில் அமுலுக்குவரும். விதி 53 என்பது சில குறிப்பிட்ட யந்திரங்களைப்பற்றி விசேஷ பாதுகாப்புகள் செய்யவேண்டு மென்பது பற்றியது. ஷை விதியின் ஷெட்யூலில் குறிப்பிடப்படும் யந்திரங்கள் (1) பஞ்சாலை சம்பந்தமான யந்திரங்கள். (2) பஞ்சு கடையும் (Cotton ginning) யந்திரங்கள். (3) மரவேலை யந்திரங்கள். (4) ரப்பர் மில் யந்திரங்கள். (5) அச்சாபீஸ் யந்திரங்கள்; சணல் மில் யந்திரங்கள்; தேயிலை பாக்டரி யந்திரங்கள்; கல் ஓடு செய்யும் யந்திரங்கள்; உடைக்கும் யந்திரங்கள்.

(3) செக்ஷன் 22 (3):— கீழே கண்ட தொழிற்சாலைகளில் 1-1-1952 முதல் யந்திரங்கள் ஓடிக்கொண்டிருக்கும் போது, யந்திரத்தின் சில குறிப்பிட்ட பாகங்களில் எவரும் சுத்தம் செய்வதும், எண்ணெய் போடுவதும், பதிய வைப்பதும் கூடாதென்று தடை செய்யப் பட்டிருக்கின்றனர். அவை விபரம்:—

தொழிற்சாலைகள்.	யந்திரத்தின் பாகம்.
1. கல் ஓடு செய்யும் தொழிற்சாலைகள்.	— பக்மில்லின் ரோலர்கள்.
2. ரைஸ் மில்கள்	— ஹல்லரின் சிலிண்டர்கள்.
3. காபி தொழிற்சாலைகள்.	— காபி கிரைண்டர்களின் டிஸ்சார்ஜ் ஷூட்கள்.
4. மாவு மில்கள்	— யந்திரங்களின் டிஸ்சார்ஜ் ஷூட்கள்.
5. வாசனைச் சாமான்— அரைக்கும் வேலைகள்.	யந்திரங்களின் ஷூட்டுகள்.
6. சணல் மில்கள்.	— ஓவர் ஹெட் ஷாப்ட்கள், அண்டர்கிரவுண்ட் ஷாப்டுகள், பெல்டுகள்.
7. பஞ்சாலைகள்.	— ஷை
8. நெசவாலைகள்.	— ஷை

ஷாப்ட் என்பது பேரிங் உள்பட.

விதி 62:— ஒவ்வொரு தொழிற்சாலையிலும் கழுவுதற்கு வேண்டிய ஜலம் முதலிய வசதிகள் எவ்விதம் இருக்கவேண்டுமென்று வற்புறுத்தும் விதி 62-என்பது 1-1-1952 முதல் எல்லாத் தொழிற்சாலைகளுக்கும் அமுலுக்கு வரும்.

விதி 64:— தொழிற்சாலையில் 'ஆம்புலன்ஸ் ரூம்' அல்லது அவசர வைத்திய அறை ஒன்று பிரத்தியேகமாக இருக்கவேண்டு மென்றும், அங்கே இருக்கவேண்டிய டாக்டர்கள், நர்சுகள், வைத்திய சாமான்கள் முதலியவைகளைப் பற்றிய விதி 64. என்பது 500 தொழிலாளர்களுக்கு மேல் வேலை செய்யும் ஒவ்வொரு தொழிற்சாலையிலும் 1-1-1952 முதல் அமுலுக்கு வரும்.

விதி 95:— 'அபாயகரமான வேலைகள்' நடக்கும் தொழிற்சாலைகளைப் பற்றிய சில விசேஷ விதிகள் இருக்கின்றன. அவ்விதிகள் 1—1—1952 முதல் அமுலுக்கு வரும். அபாயகரமான வேலைகள் என்பது எவை என்றும் அவை சம்பந்தமாக விதிகளும் விதி 95-ல் அடங்கி இருக்கின்றன. அபாயகரமான வேலைகள் என்பவை:—

1. சோடா கலர் செய்யும் வேலைகள்
2. எலெக்ட்ரோலைடிக் வேலைகள்
3. எலெக்ட்ரிக் அக்யூமுலேடர்கள் செய்வதும் ரிபேர் செய்வதும்
4. கண்ணாடி உற்பத்தி செய்வது
5. உலோகங்களை அரைப்பது பளபளப்பாக்குவது
6. காரீயம் சம்பந்தமான வேலைகள்
7. பெட்ரோலிலிருந்து பெட்ரோல் காஸ் உண்டாக்குவது

8. கம்பிரஸ்டு ஏர் அல்லது நீராவியால் பட்டைச்சிலே உப்புத்தாள் முதலியவைகளை உபயோகித்துப் பண்டங்களை சுத்தம் செய்வது அல்லது பளபளப்பாக்குவது

9. தோல் பதனிடுவது

10. செலுலோஸ் ஸ்ப்ரேயிங்

11. கிராபைட் பௌடர் செய்வது.

இவை சம்பந்தமான தொழில்கள் செய்யும் தொழிற்சாலைகள்.

(23—10—1951 — சென்னைச் சர்க்கார் கெஜட்—பாகம் I — பக்கம் 1494.)

தொழிற்சாலைச் சட்டம். சம்பளத்துடன் விடுமுறை-விதி விலக்கு

தொழிற்சாலைச் சட்டத்தின் செக்ஷன் 84—என்பது ஒரு குறிப்பிட்ட தொழிற்சாலையில் தொழிலாளர்களுக்குச் சம்பளத்துடன் கொடுக்கப்படும் லீவு சம்பந்தமாக அங்கே அனுஷ்டிக்கப்படும் விதிகள், தொழிற்சாலைச் சட்டத்தில் கண்ட விதிகளைவிட தொழிலாளர்களுக்கு அதிக லாபகரமானதென்றோ; அல்லது அச்சட்டத்தில் கண்ட விதிகளைவிடக் குறைந்த பயனளிக்கக் கூடியதல்ல என்றோ, ராஜ்ய சர்க்காருக்குத் திருப்திகரமாகத் தோன்றினால், அவ்விதமான தொழிற்சாலை சம்பந்தப்பட்ட வரையில் லீவுச் சம்பளம் சம்பந்தமான விதிகளிலிருந்து 'விதிவிலக்கு' அளிக்க ராஜ்ய சர்க்காருக்கு அதிகாரமுண்டு—என்பதைப்பற்றி. இப்படி விதிவிலக்கு அளிக்கப்பட்ட தொழிற்சாலைகளில், தொழிலாளர்களுக்குரிய லீவு நாட்களைக் காண்பிக்கும் ஒரு ரிஜிஸ்டர் வைத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று இருந்த தொழிற்சாலை விதி 94 — இப்பொழுது திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது. இப்புது விதிப்படி மேற்கண்ட விதம் விதிவிலக்கு அளிக்கப்பட்ட தொழிற்சாலைகளில், அந்தத் தொழிற்சாலையில் அனுஷ்டானத்திலிருக்கும், தொழிலாளர்களின் லீவு, சம்பளம் பற்றிய ஏற்பாடு என்ன என்று காண்பிக்கும் விவரத்தை அத்தொழிற்சாலையின் பிரதான வாசலில் யாவருக்கும் தெரியும்படி அத்தொழிற்சாலையின் மானேஜர், பிரசுரம் செய்ய வேண்டுமென்றும்; இதற்கு ஒரு நகல் பாக்டரி இன்ஸ்பெக்டருக்கு அனுப்ப வேண்டுமென்றும்; விதி விலக்கு அளிக்கும் போது ராஜ்ய சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாட்டை அவர்களுடைய அனுமதியின்றி தொழிற்சாலைக்காரர்கள் மாற்றக் கூடாதென்றும்—விதி 94 திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது.

மேலும் தொழிற்சாலை விதிகள் 87 முதல் 93 வரையுள்ள 'சம்பளத்துடன் லீவு' சம்பந்தமான விதிகள் எல்லாமோ சில மட்டுமோ ஒரு தொழிற்சாலையிலுள்ள எல்லாத் தொழிலாளர்களுக்குமோ, குறிப்பிட்ட தொழிலாளர்களுக்கோ, அனுஷ்டிக்கப்பட வேண்டியதில்லை என்று விதிவிலக்கு அளிக்க, சீப் இன்ஸ்பெக்டருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்காக விதி 94A என்று ஒரு புது விதி சேர்க்கப்பட்டிருக்கிறது.

(16—10—1951 — சென்னைச் சர்க்கார் கெஜட்—பாகம் I ரூல் சப்ளிமெண்ட் — பக்கம் 551.)

ஷாப் சட்டம்—விதி விலக்குகள். எலெக்ட்ரிக் விசை உள்ள இடங்கள்:

எலெக்ட்ரிக் விசை உதவியால் உற்பத்தி வேலைகள் செய்யும் ஸ்தாபனங்களுக்கு 6—11—1951 முதல் ஒரு வருடத்திற்கு தினசரி எந்த நேரத்திற்கு முன் திறக்கக் கூடாது எந்த நேரத்திற்குப் பின் திறந்து வைத்திருக்கக் கூடாதென்றும் உள்ள செக்ஷன் 7 (1)—11 (1) ல் கண்ட விதிகளிலிருந்து விதி விலக்கு அளிக்கப் பட்டிருக்கிறது.

(6—11—1951 சென்னைச் சர்க்கார் கெஜட்—பாகம் 1 பக்கம் 1570.)

முடி அலங்கார நிலையங்கள்—விதி விலக்கு

எழுதப் படிக்கத் தெரியாதவர்களால் நடத்தப்படும் 'ஹேர் டிரஸ்ஸிங் சலூன்கள்' (Hair Dressing Saloons) என்ற முடி அலங்கார நிலையங்களில் ஷாப் சட்ட ரிஜிஸ்டர்களும் நோட்டீசுகளும் வைத்துக் கொள்ள வேண்டியதில்லை என்று 16—10—1951 முதல் ஒரு வருடத்திற்கு இவர்களுக்கு, ஷாப் சட்ட செக்ஷன் 47 லிருந்து விதி விலக்கு அளிக்கப் பட்டிருக்கிறது. ஆனால் இவர்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்களென்றும், மேற்கண்ட ரிஜிஸ்டர் முதலியவைகளை வைத்துக் கொள்வதற்காக மட்டில் ஒரு தனிச் சிப்பந்தி அமர்த்திக் கொள்ளும்படி நேரிடுமென்றும், ஷாப் இன்ஸ்பெக்டர் அபிப்பிராயப் படவேண்டும். அப்படியானால் தான் விதி விலக்கு உண்டு. இவர்களும் ஷாப் இன்ஸ்பெக்டர் சோதனைக் குறிப்புக்கள் எழுத ஒரு 'விசிட்' புக் என்ற நோட்டு புஸ்தகம் வைத்துக் கொள்ள வேண்டும்.

(16—10—1951—சென்னைச் சர்க்கார் கெஜட் பாகம் 1—பக்கம் 1446)

இப்பகுதியில் நமது சுப்ரீம் கோர்ட், ஹைகோர்ட்டுகள் முதலிய உயர் நீதி மன்றங்களின் நீதிபதிகளால் அளிக்கப்படும் தீர்ப்புகளின் முக்கிய அம்சங்களை ஒட்டி சட்ட விளக்கம் செய்யப்படும். சட்ட தத்துவங்களை விளக்கும் அன்னிய நாடு உயர் நீதிபதிகளின் அபிப்பிராயங்களையும் நேயர்கள் இங்கே வாசிக்கலாம்.

தொல்லை கொடுக்கும் குடிக்கூலிக்காரர்.

[ஆதாரம்:—1951 (2) மதராஸ் லா ஜர்னல்—486]

சென்னை ஜாகை—வாடகைக் கட்டுப்பாடு சட்டத்தில் ஒரு ஷரத்து இருக்கின்றது. அதாவது ஒரு கட்டடத்தில் குடியிருப்பவர், அல்லது அதை வாடகைக்கு வைத்துக் கொண்டிருப்பவர் பக்கத்திலிருக்கும் "கட்டடங்களில்" வசிப்பவர்களுக்குத் தொல்லை அல்லது உபத்திரவம் (nuisance) ஏற்படும்படி நடந்து கொண்டு வந்தால், அவர் வீட்டை விட்டுக்காலி செய்ய வேண்டு மென்று அவர் மீது ரெண்ட் கண்ட்ரோலரிடம் கட்டடக்காரர் மனுக் கொடுக்கலாம். அவர் கொடுக்க வேண்டிய வாடகையைச் சரிவர கெடுப்படி கொடுத்து வந்தாலும், அக்கம் பக்கக் கட்டடங்களில் இருப்பவர்களுக்குத் தொல்லை கொடுத்துக் கொண்டே இருக்கும் அவரை அகற்றச் சட்டம் இடம் கொடுக்கிறது. பிரஸ்தாப வழக்கில், ஒரே வீட்டில், பல குடிகள் வைக்கப்பட்டிருந்தன. அவர்களில் ஒருவர் மட்டில் அவ்வீட்டின் மற்றப் பாகங்களில் குடியிருந்து வருபவர்களுடன் அடிக்கடி சண்டை சச்சரவுகள் செய்து கொண்டே இருந்தார். மற்ற வாடகைக்காரர்கள் அங்கே இவருடன் குடியிருக்க முடியாத நிலைமைக்கு அவர் மற்றவர்களை உபத்திரவம் செய்து கொண்டே இருந்தார். தொல்லை கொடுக்கும் அவர் மீது வீட்டுக்காரர் மனுப் போட்டு அவரை வீட்டை விட்டு அகற்ற வேண்டுமென்று கோரினார். அவர் அதே வீட்டில் மற்றப் பாகங்களில் குடியிருப்பவர்களுடன் எப்பொழுதும் சண்டை செய்து கொண்டுதான் இருக்கிறார் என்பது ருசுவாயிற்று. அவர் வீட்டைக்காலி செய்ய வேண்டு மென்று ரெண்ட் கண்ட்ரோலர் உத்தரவிட்டார். அப்பீலிலும் அது உறுதி செய்யப்பட்டது. இதன் பேரில் அவர் ஹைகோர்ட்டுக்குப் பரிசீலனை மனுக் கொடுத்து ஒரு சிறிய சட்டப் பிரச்னையைக் கிளப்பினார். அதாவது:—சட்டத்தில் இருப்பது அக்கம் பக்கத்தில் உள்ள "கட்டடங்களில்" வசிப்பவர்களுக்குத் தொல்லை கொடுப்பவரைத் தான் அகற்றுவது பற்றியே. நான் பக்கத்துக் கட்டிடக்காரர்களுக்கு எவ்விதமான தொல்லையும் செய்யவில்லை. நான் குடியிருக்கும் அதே கட்டிடத்திலிருப்பவர்களைத் தானே நான் உபத்திரவப்படுத்தினேன். இதற்குச் சட்டத்தின் வாசகம் பொருந்தாது. என்னை அகற்றச் சட்டம் இடங்கொடுக்காது — என்ற முறையில் வாதடினார். உயர் நீதி பதிகள் இக்கட்சியை ஏற்கவில்லை. "கட்டடம்" என்ற வார்த்தைக்கு "கட்டடத்தின் ஒரு பாகமும்" என்ற அர்த்தமும் இச்சட்டத்தில் கொடுக்கப்பட்டிருப்பதால், ஒரு வீட்டில் தனித் தனி நபர்கள் குடியிருந்து வந்தால் சட்டப்படி ஒவ்வொரு பாகமும் ஒரு 'கட்டடமாக'வே இச்சட்டத்தில் பாவிக்கப் படும் என்றும், இந்த அர்த்தப்படி, அவர் அக்கம் பக்கத்துக் 'கட்டடங்களில்' வசிப்பவருக்குத் தொல்லை கொடுத்து வருவதாகவே ஆகும் என்றும் அபிப்பிராயப்பட்டு, அவருடைய கட்சி நிராகரிக்கப்பட்டது.

லஞ்சம் கொடுத்துக்கொண்டே வந்தவர், திடீரென்று, யோக்கியரானால் அவர் சொல்வதை நம்பலாமா?

[ஆதாரம்:—1951 ஆல் இந்தியா ரிபோர்ட்டர்—ஒரிசா ஹைகோர்ட்—297]

மிக ரகசியமாகச் செய்யப்படும் குற்றங்களில்,

லஞ்சம் வாங்குவதும், கொடுப்பதும் ஒன்று. லஞ்சம் வாங்குபவர், கொடுப்பவர் இருவரும் குற்றவாளிகள் தான். ஆனால் ஒருவரை ஒருவர் சாதாரணமாகக் காட்டிக் கொடுக்கமாட்டார்கள். ஏனென்றால் அப்படிக் காட்டிக் கொடுப்பவரும் ஒரு குற்றவாளி தானே! குற்றம் செய்பவர் களில் ஒருவர், தாம் மட்டில் தப்பித்துக் கொள்ளும் எண்ணத்துடன் போலிசாருடன் சேர்ந்து சர்க்கார் தரப்பில் சாக்ஷி சொல்வதும் உண்டு. ஆனால் இவர்களுடைய சாக்ஷியங்கள், வேறு சாட்சிகளால் ஆமோதிக்கப் பட்டா லொழிய, நம்பப்பட மாட்டா. ஏனென்றால் குற்றம் செய்யத் துணிந்தவர்கள் பொய் சொல்லவும் துணிய மாட்டார்களா? அவர்கள் சொல்லுவதை எப்படி நம்புவது?

கான்சாகிப் முகமதுகான் என்பவர் ஒரு பெரிய மர வியாபாரி, முதலாளி. அடிக்கடி இந்த முதலாளி ரயில் மார்க்கமாக 'வாகன்' கணக்கில் சரக்கு அனுப்பி வந்தார். இவ் விஷயங்களைக் கவனிக்க அவருக்கு வாசிமுகமது என்று ஒரு பெரிய ஏஜண்டும் லெக்ஷிமிதரன் என்று ஒரு சின்ன ஏஜண்டும் வேலை பார்த்தார் கள். இவ்விருவர்களும் பின்பு சொன்ன வாக்கு மூலங்கள் என்ன வென்றால்—அந்த ஊர் ஸ்டேஷன் மாஸ்டர் தருவித்துக் கொடுக்கும் ஒவ்வொரு ரயில்வே 'வாகனு'க்கும் (wagon) அவர் ரூபாய் 20 வீதம் லஞ்சம் கேட்பார் என்றும், அதை இந்த ஏஜண்டுகளும் கொடுத்து 'வாகனை' வரவழைத்துக் கொள்வது தான் வழக்கம் என்றும் சொன்னார்கள். திடீரென்று 28—1—1947 ல் வாசிமுகமது ஒரு யோக்கிய ராக மாறினார். ஏனென்றால் அன்று அவர் போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் போய் ஸ்டேஷன் மாஸ்டர்மீது ஒரு புகார் (கம்ப்ளெயிண்டு)—தாகல் செய்தார். முன்பு சப்ளை செய்த வாகன் களுக்காக ரூ. 80-ம் அன்று தருவித்துக் கொடுத்த வாகனுக்காக ரூ. 20 ஆக லஞ்சம் ரூ. 100-ஐயும் இரண்டு தினங்களுக்குள் தம்மிடம் கொடுக்கும்படி அந்த ஊர் ஸ்டேஷன் மாஸ்டர் தம்மை வற்புறுத்துவதாக இந்தப் புகாரில் கண்டிருந்தார். உடனே போலீஸ் இன்ஸ்பெக்டர் புலன் விசாரணை செய்யத் தொடங்கினார். இன்னும் ஸ்டேஷன் மாஸ்டர் பிரஸ்தாப லஞ்சத்தை வாங்கவில்லை. கேட்டு மட்டில் இருக்கிறார். இன்னும் இரண்டு தினங்களில் நிச்சயம் அந்த லஞ்சத்தை வாங்கியும் விடுவார். அவர் லஞ்சம் வாங்கும் போது தகுந்த சாக்ஷியங்களும் ருசுக்களும் இருந்தால் தானே குற்றத்தைக் கோர்ட்டில் ருசுப்பிக்க முடியும். ஆகையால் முன் ஜாக்கிரதையாகவே போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒரு மாஜிஸ்ட்ரேட்டின் உதவியையும் நாடினார். தங்களுக்குள் ஓர் ஏற்பாடும் செய்து கொண்டனர். 100 ரூபாய் லஞ்சமும் பத்து ரூபாய் கரன்சி நோட்டுகளாக இருக்க வேண்டு மென்று தீர்மானித்தனர். இந்நோட்டுகளின் நம்பர்களை போலீஸ் இன்ஸ்பெக்டரும், மாஜிஸ்ட்ரேட்டும் குறித்துக் கொண்டனர். பிப்ரவரி 2 ஆம் தேதி காலையில் இவர்கள் ரயில்வே ஸ்டேஷன் அருகில் ஒளித்து கொண் டிருந்தனர். முன் செய்து கொண்ட ஏற்பாட்டின்படி கான்சாகிப்பின் ஏஜண்டுகள் இருவரும் ஸ்டேஷன் மாஸ்டர் அறைக்கு இந்தப் பத்து ரூபாய் நோட்டுகளை எடுத்துச் சென்றனர். இவர்கள் உடனே வெளியே வந்து ஜாடை காண்பித்தனர். அங்கு ஒளிந்திருந்த போலீஸ் இன்ஸ்பெக்டரும் மாஜிஸ்ட்ரேட்டும், ஸ்டேஷன் மாஸ்டருடைய அறைக்குள் உடனே வேகமாக நுழைந்தனர். தாங்கள் யார் என்பதைச் சொல்லி, வாசி முகமதிடம் அவர் வாங்கிய ரூபாயை உடனே எடுக்கும்படி, போலீஸ் இன்ஸ்பெக்டர், ஸ்டேஷன் மாஸ்டரைக் கேட்டார். ஸ்டேஷன் மாஸ்டர் இரும்புப் பெட்டியைத் திறந்து ஒரு நூறு ரூபாய் நோட்டை எடுத்தார். தாம் கேட்பது அது அல்ல வென்றும் பத்து ரூபாய் நோட்டுக்களைக் கேட்பதாகவும் போலீஸ் இன்ஸ் பெக்டர் சொன்ன பின்பு ஸ்டேஷன் மாஸ்டர் தம்முடைய இடது நிஜார் பையிலிருந்து பத்து ரூபாய் நோட்டுக்களை எடுத்தார். அதே பத்து ரூபாய் நோட்டுகள் தான். சட்டப்படி சோதனை ஜாப்தா முதலியவை தயார் செய்யப்பட்டன. ஸ்டேஷன் மாஸ்டர் லஞ்சம் வாங்கியதாகச் சர்க்காரால் கிரிமினல் வழக்குத் தாகல் செய்யப் பட்டது.

ஆனால் ஸ்டேஷன் மாஸ்டர் தண்டனை அடையவில்லை. குற்றம் ருசுவாக வில்லை என்று தள்ளப்பட்டது. ஸ்டேஷன் மாஸ்டர் சொல்லிய கட்சியை அவ்வழக்கை விசாரித்த மாஜிஸ்ட்ரேட் ஒப்புக் கொள்ளவில்லை. அதாவது இந்த ஏஜண்டுகள் உள்ளே நுழைந்து பத்து ரூபாய் நோட்டுக்களைக் கொடுத்து ஒரு நூறு ரூபாய் நோட்டுக் கொடுக்கும்படி தம்மைக் கேட்டனர் என்றும் தாம் அந்த நூறு ரூபாய் நோட்டை எடுத்துக் கொடுக்கும் முன்பே அவர்கள் திடீரென்று வெளியே போய் விட்டார்களென்றும் ஸ்டேஷன் மாஸ்டர் சொன்னார். இதை மாஜிஸ்ட்ரேட் நம்பவில்லை ஆனால் இந்தப் பத்து ரூபாய் நோட்டுகள்

எதற்காகக் கொடுக்கப் பட்டன என்பதைப் பற்றி போதுமான ருசுவில்லை என்றும், ஸ்டேஷன் மாஸ்டர் மீது சந்தேகம் ஏற்படுகின்றதே ஒழிய நிச்சயமாகக் குற்றம் நடந்ததென்று ஏற்படாதென்றும் மாஜிஸ்ட்ரேட் அபிப்பிராயப் பட்டார். அதன் பேரில் சர்க்கார், ஒரிசா ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தனர். அப்பீலிலும் ஸ்டேஷன் மாஸ்டர் தப்பிவிட்டார்.

பத்து ரூபாய் நோட்டுகள் அன்று ஸ்டேஷன் மாஸ்டரிடம் கொடுக்கப்பட்டன — என்பது மட்டில் தானே ருசுவாயிற்று. இது ஒன்றும் குற்றமல்ல. இவை லஞ்சமாகக் கொடுக்கப்பட்டதென்பதற்கு ருசு இருந்தாலொழிய அது குற்றமாகாது. இப்படிக் கொடுக்கப்பட்ட தொகை, லஞ்சம் தான் என்று சாட்சி சொன்னவர்கள் கான்சாகிப்பின் இரண்டு ஏஜண்டுகள் தான், வேறு ஒருவரும் இல்லை. இவர்களுக்கும் ஸ்டேஷன் மாஸ்டருக்கும் சில மாதங்களாக மனத்தாங்கல் இருந்ததென்பதற்கு ருசு இருந்தது. இந்த ஸ்டேஷன் மாஸ்டர் தங்களுக்குச் சரிவர வாகன் சப்ளை செய்யவில்லை என்று அவர் மீது ரயில் அதிகாரிகளுக்கு இவர்கள் ஒரு புகார் போட்டிருந்தனர். இரண்டொரு மாதங்களுக்கு முன்பு ரயில்வே ஸ்டேஷன் அருகில் நடு ரோட்டில் மோட்டார் போக்கு வரத்துக்கு இடைஞ்சலாக மரம் அடுக்கியதற்காக இந்த ஏஜண்டை ஸ்டேஷன் மாஸ்டர் கோபித்துச் சண்டை போட்டதும் வெளியாயிற்று. இப்படி இருக்கும் போது ஸ்டேஷன் மாஸ்டர் லஞ்சம் கேட்பது அசம்பாவிதமானது. மேலும் ஒவ்வொரு தடவையும் ஒரு வாகனுக்கு ரூ. 20 வீதம் ஸ்டேஷன் மாஸ்டர் லஞ்சம் வாங்கி வந்ததாக இந்த இரண்டு ஏஜண்டுகள் மட்டில் சாட்சி சொன்னார்கள். இவர்களும் ஒவ்வொருவரும் மற்றவர் தான் லஞ்சம் கொடுப்பது வழக்கமென்று சொல்லி அப்பொறுப்பை எவரும் ஏற்றுக்கொள்ளவில்லை. மேலும் லஞ்சம் வாங்குபவர்கள் அதில் பாக்கி வைத்துக் கொள்ள மாட்டார்கள். லஞ்சத்திலும் பற்று வரவு போல் ஸ்டேஷன் மாஸ்டர் பாக்கி வைத்திருந்ததாகச் சொல்வதும் நம்பத் தக்கதல்ல. மேலும் இந்தப் பத்து ரூபாய் நோட்டுக்கள் கொடுக்கப்பட்ட போது இன்னும் வேறு மூன்று நான்கு ஆசாமிகள் எதிரே இருந்தனர். இப்படிப் பட்டப் பகலில் வெட்ட வெளிச்சமாகவா லஞ்சம் வாங்குவார்கள்? மேலும் இவர்கள் ஸ்டேஷன் மாஸ்டரிடம் பத்து ரூபாய் நோட்டுக்களைக் கொடுத்து ஒரு நூறு ரூபாய் நோட்டுக் கேட்டார்கள்—என்பது ஏன் உண்மையாக இருக்கக் கூடாது? எல்லாவற்றிற்கும் மேலாக குற்றத்தை ருசுப்பித்த இரு ஏஜண்டுகளும் யார்? இவர்கள் ஒற்றர்கள் மாதிரி தானே. குற்றவாளியை மடக்குவதில் போலீசார் தரப்பில் உதவிக்கு வந்தவர்கள் இவர்கள். இவ்விதமான சாட்சிகளை நம்புவதா கூடாதா என்று அந்தந்த வழக்கை விசாரிக்கும் நீதிபதியே அந்தந்த சாட்சிகள் சம்பந்தப் பட்டவரை முடிவு செய்து கொள்ள வேண்டுமென்றும்; பிரஸ்தாப வழக்கில் சாட்சி சொன்ன இந்த ஏஜண்டுகள் நம்பத் தக்கவர்கள் அல்லவென்றும் உயர் நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டு சர்க்காரின் அப்பீலைத் தள்ளினர்.

* * * *

செல்லும் தீர்ப்புகளும் செல்லாத தீர்ப்புகளும்.

ஒரு கொலை வழக்கை விசாரணை செய்த ராமநாதபுரம் செஷன்ஸ் ஜட்ஜ், ஸ்ரீ. எச். ஏ. அய்யர் எதிரிக்குத் தூக்குத் தண்டனை விதித்துத் தீர்ப்பும் எழுதி விட்டார். ஆனால் அவர் அத்தீர்ப்பை கோர்ட்டில் வாசிக்கு முன் மாற்றப்பட்டு விட்டதால் அவருடைய இடத்தில் செஷன்ஸ் ஜட்ஜாக நியமிக்கப்பட்ட ஸ்ரீ சங்கரன் நம்பியார் அத்தீர்ப்பைப் பகிரங்க கோர்ட்டில் வாசித்து எதிரிக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப் பட்டிருப்பதை அறிவித்தார். அத்தீர்ப்பின் மீது எதிரி சென்னை ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்ததில் உயர் நீதிபதிகள் இவ்வழக்கின் விஷயத்திற்குள் புகாமலே, இத்தூக்குத் தண்டனை விதிக்கும் தீர்ப்பு, செல்லத் தக்கதன்று என்று அபிப்பிராயப்பட்டு அதை ரத்துச் செய்து மறு விசாரணை நடத்துமாறு உத்தரவிட்டனர்.

ஒரு மாஜிஸ்ட்ரேட் ஒரு வழக்கை விசாரணை செய்து தீர்ப்பு எழுதிய பின் மாற்றப்பட்டு அத்தீர்ப்பை அவருக்குப் பின் வரும் மாஜிஸ்ட்ரேட் பகிரங்க கோர்ட்டில் வாசித்து அதில் கையெழுத்துப் போடுவது சட்ட விரோதமல்ல என்று கிரிமினல் வழக்கு முறைச்சட்டம் செக்ஷன் 350 (1) ல் இருந்தாலும் செஷன்ஸ் விசாரணைகள் சம்பந்தப் பட்ட வரையில், எந்த செஷன்ஸ் நீதிபதி சாட்சிகளைக் கேட்டு வழக்கை விசாரணைச் செய்து தீர்ப்பும் எழுது

கிரூரோ அவரே அத்தீர்ப்பைப் பகிரங்கக் கோர்ட்டிலும் வாசித்துத் தண்டனை அளித்தால் தான் அது சட்டத்தை அனுசரித்து செய்யப் பட்ட தீர்ப்பாகும் என்று இரண்டு உயர் நீதிபதிகளும் அபிப்பிராயப் பட்டனர். (1951-ஆல் இந்தியா ரிபோர்ட்டர்—மதராஸ்—902.)

ஆனால் அலகாபாத் ஹைகோர்ட்டில் ஒரு கிரிமினல் வழக்குச் சம்பந்தமாக ஏற்பட்ட ஒரு மனுவை விசாரணை செய்த உயர் நீதிபதி சேத் அவர்கள் இரு தரப்பு வாதங்களையும் கேட்ட பின்னர் 22—1—1951 ல் பகிரங்க கோர்ட்டிலேயே அவ்வழக்கில் தீர்ப்புச் சொன்னர். அதாவது அந்நீதிபதி அவர்கள் வாயால் சொல்லிவந்த தீர்ப்பை அதற்கான குமாஸ்தா குறுக்கெழுத்தில் (ஷார்ட் ஹாண்ட்) எழுதிக் கொண்டார். பிறகு இக்குறுக்கெழுத்து எழுதியவர் அதை டைப் அடித்து அதில் நீதிபதி அவர்களின் கையெழுத்து வாங்குவது வழக்கம். இதற்குச் சில தினங்கள் பிடிக்கும். ஆனல் அப்படிச் செய்யப்படுமுன், அதாவது 26—1—1951 ல் நீதிபதி சேத் அவர்கள் காலமானர். தீர்ப்பில் அந்நீதிபதி கையெழுத்துப் போடாமலிருந்ததால், அம்மனு முடிவடைய வில்லை என்றும் மறுபடியும் அது விசாரிக்கப்பட வேண்டுமென்றும் மனுதாருடைய வக்கீல் வாதாடினர். ஆனல் அலகாபாத் ஹைகோர்ட்டார் இதை ஒப்புக் கொள்ள வில்லை. இறந்த நீதிபதி அவர்களால் வாயால் தீர்ப்பு அளிக்கப் பட்டவுடனேயே மனு முடிவடைந்து விட்டதென்றும், அப்படி அளிக்கப் பட்ட தீர்ப்பில் நீதிபதி அவர்கள் கையெழுத்துச் செய்யாமலிருந்தாலும் அது செல்லுபடியுள்ளதே என்றும் ஹைகோர்ட்டார் அபிப்பிராயப் பட்டனர். (1951 ஆல் இந்தியா ரிப்போர்ட்டர்—அலகாபாத்—709)

சிவில் வழக்குகள் சம்பந்தப் பட்ட வரையில் இது சம்பந்தமாக ஒரு பிரத்தியேக விதியே இருக்கின்றது. ஒரு நீதிபதி எழுதிய தீர்ப்பை அவருக்குப் பதிலாக அப்பதவிக்கு வரும் அடுத்த நீதிபதி பகிரங்கக் கோர்ட்டில் வாசிக்கலாமென்று சிவில் வழக்கு முறைச் சட்டத்திலேயே ஒரு விதி இருக்கின்றது.

அயல் நாடுகளில்

தாவிய குதிரையும் – அதன் சொந்தக்காரரும்

[ஆதாரம்:—(1951) 1 - ஆல் இங்கிலண்டு ரிபோர்ட்டர்-261 (CA)]

ஒருவர் பொது ரஸ்தாவில் மோட்டார் சைகிளில் போய்க்கொண்டிருக்கும் போது, பக்கத்துத் தோட்டத்தில் மேய்ந்து கொண்டிருந்த ஒரு குதிரை, வேலியைக் கிழித்துக் கொண்டு மோட்டார் சைக்கிளின்மேல் தாவிக் குதித்தது. மோட்டார் சைக்கிளுக்கும் சேதம்; சவாரி செய்பவருக்கும் காயம் ஏற்பட்டது. இவர் இவ்விரண்டு விஷயங்களுக்கும் தமக்கு நஷ்டஈடு கிடைக்கவேண்டுமென்று அக்குதிரையின் சொந்தக்காரர் மீது கோர்ட்டில் தாவா செய்தார். குதிரை மாடு முதலிய மிருகங்களின் சொந்தக்காரர்களின் பொறுப்பு என்ன; அவைகள் எங்கும் திரியாமல் தடுத்து வைக்க வேண்டிய கடமை அவர்களுக்கு உண்டா என்பதைப்பற்றி ஆங்கில உயர் நீதிபதிகள் இவ்வழக்கில் ஆராய்ந்தனர். சாதாரண மிருகங்களைப்பற்றி அவ்விதக் கடமை, சொந்தக்காரருக்கு இல்லை என்றும்; ஆனல் இப்பொது விதிக்கு விதிவிலக்கு உண்டென்றும்; அதாவது ஒரு குறிப்பிட்ட மிருகமானது முரட்டுத் தன்மை உள்ளதாகவும் அதைக் கட்டாமல் திரியும்படி விட்டுவைப்பது பொதுஜனங்களுக்கு அபாயத்தை விளைவிக்கக் கூடியதாகவும் இருந்தால், அவ்வித மிருகங்களின் சொந்தக்காரர்கள் அவைகளை பிறருக்குக் கெடுதி நேராமல் பார்த்துக் கொள்ளக் கடமைப்பட்டவராவார்கள் என்றும், நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டனர். குதிரை சாதாரணமான குதிரையா, அல்லது முரட்டுக் குதிரையா என்பதைப் பொறுத்திருக்கிறது — அதன் சொந்தக்காரரின் பொறுப்பு. முரட்டுக் கால் நடைகளால் பிறருக்கு ஏற்படும் நஷ்டங்களை அவைகளின் சொந்தக்காரர்கள் சட்டப்படி கொடுக்க கடமைப் பட்டவர்களே.

* * * *

18275

லஞ்சம் வாங்கிய தொகை யாரைச் சேரும்; அதை வாங்கிய சர்க்கார் ஊழியரைச் சேருமா; அல்லது அவரை நியமித்த சர்க்காருக்கே சேருமா?

[ஆதாரம்:—(1951) 1 - ஆல் இங்கிலண்டு ரிபோர்டர் 617 H.L.]

சர்க்கார் ஊழியர் ஒருவர் லஞ்சம் வாங்கினல் — கண்டுபிடிக்கப்பட்டால் — அவர் மீது சர்க்கார், கிரிமினல் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வார்கள். லஞ்சம் வாங்கியவர் தண்டிக்கப் படலாம்; அபராதம் விதிக்கப்படலாம்; அவர் வேலையை விட்டும் சர்க்காரால் அகற்றப் படலாம். இவை நமக்குத் தெரிந்த விஷயங்களே. ஆனல் நாளடைவில் ஆயிரக்கணக்காக வும் லக்ஷக்கணக்காகவும் லஞ்சம் வாங்கிப் பணம் சேர்த்த ஒரு சர்க்கார் ஊழியர் ஏதாவது ஒரு தடவை மாட்டிக்கொண்டு கொஞ்சம் சிறை வாசம் அல்லது நூறு, ஐம்பது அபராதம் விதிக்கப்பட்டு அவர் தம் வேலையையும் இழக்கும்படி நேர்ந்தால்—அவர் அதைப் பொருட் படுத்தமாட்டார். ஏனென்ருல் அவர் நாளடைவில் சேர்த்த பணம் அவரிடமேதான் இருக்கும்.

ஆனல் ஆங்கில சர்க்கார் லஞ்சம் வாங்கிய தங்கள் ஊழியரிடமே அப்பணத்தையும் விட்டு விடவில்லை. அவர் மீது கோர்ட்டில் தாவா செய்து லஞ்சம் வாங்கப்பட்ட தொகைகள் எல்லாம் சட்டப்படி சர்க்காரைச் சேர்ந்ததென்றே ஸ்தாபித்து அதையும் வாங்கி விட்டார்கள். வழக்கின் விபரம்:—

எஜிப்டைச் சேர்ந்த கெய்ரோவில், பிரிட்டிஷ் ராணுவ மருந்துக் கிடங்கைச் சேர்ந்த ஒரு 'சார்ஜெண்ட்' இருந்தார். அம்மருந்துக்கிடங்கின் லாரிகள் எஜிப்து சர்க்காரால் சோதனை செய்யப்படமாட்டா. ராணுவ லாரிகளில் அந்தக் கிடங்கின் ஸார்ஜெண்ட் ஒருவர் இருப்பார். இந்த அடையாளத்தைக் கண்டு அவ்வித லாரிகள் சுதேச சர்க்காரால் சோதனைக்குட்படுத்தப் படமாட்டா. மற்ற லாரிகள் அவ்வூர் சட்டங்களுக் கிணங்க சோதனை செய்யப்படும். வரி கொடுக்க நேரிடும் இந்த 'ஸார்ஜெண்ட்' ஒரு வேலை செய்தார். சட்ட விரோதமாக, பிரிட்டிஷ் ராணுவத்திற்குச் சம்பந்தமில்லாத வெளி நபர்களிடம் அவர் 'லஞ்சம்' வாங்கிக் கொண்டு, அவர்களுடைய லாரிகளில் தாமும் ஏறிக்கொண்டு போய், எகிப்து சர்க்காரால் எவ்வித சோதனைகளுக்கும் அச்சொந்த லாரிகளை உட்படுத்தாமல் செய்து வந்தார். இவர் இதற்காக வாங்கிய லஞ்சத் தொகைகள் எல்லாம் தங்களைச் சேர்ந்ததென்று பிரிட்டிஷ் சர்க்கார் இவர்மீது சிவில் கோர்ட்டில் தாவா செய்தனர். "குற்றம் செய்தோ எப்படியோ நானே சம்பாதித்த பணம் இது. ஆகையால் என்னைச் சேர்ந்ததே. மேலும் என் செய்கையால் என்னை நியமித்த பிரிட்டிஷ் சர்க்காருக்கு எவ்வித நஷ்டமும் ஏற்படவில்லை. நஷ்டம் ஏற்பட்டது எகிப்து சர்க்காருக்கு" — என்று அந்த சார்ஜெண்ட் கட்சி சொன்னர். இதில் ஒரு சட்டப் பிரச்னை ஏற்பட்டது. ஒரு முதலாளியின் ஏஜெண்டோ, சிப்பந்தியோ, ஊழியரோ, முதலாளியின் வேலையைச் செய்யும்போது, ரகசியமாகச் சம்பாதிக்கும் கமிஷன், லாபம், அல்லது லஞ்சம் யாரைச் சேர்ந்தது? இவ்விதம் அவர் ரகசியமாகச் சம்பாதிப்பதால் முதலாளிக்கு எவ்விதமான கெடுதியோ நஷ்டமோ ஏற்படாவிட்டாலும், சட்டம் என்ன—என்பது விவாதிக்கப்பட்டது. முதலாளிக்கு நஷ்டம் ஏற்பட்டாலும் ஏற்படா விட்டாலும், அவருடைய ஏஜெண்டு, அல்லது சிப்பந்தி அல்லது ஊழியர் இவ்விதம் ரகசியமாக அடையும் எல்லாப் பணங்களும் முதலாளியையே சேரும் என்று ஆங்கில உயர் நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டு, சட்டப் பிரச்னையைத் தீர்த்தனர். அதை அனுசரித்து பிரிட்டிஷ் சர்க்காரின் ஊழியர் வாங்கிய லஞ்சம் பிரிட்டிஷ் சர்க்காரையே சேர்ந்தது.

ஆடைகளின் அழுக்கைப் போக்கி அழகு பெறச் செய்வது.

V. V. சோப்புகளே.

தயாரிப்பவர்:—

V. V. சோப்பு ஒர்க்ஸ்,

3/2156, சக்கரபாணிகோவில் மேல சன்னதி, கும்பகோணம்.

தமிழில்

விற்பனை வரி

தனிப்பிரதி விலை ரூ. 2—0—0.

(தபால் சார்ஜ் பிரத்தியேகம்)

தனிப்பிரதி தேவையானல் தபால் சார்ஜ் உள்பட ரூ. 2—8—0 அனுப்பினல் ரிஜிஸ்டர் தபாலில் அனுப்பப்படும்.

கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:—

மானேஜர்

"வக்கீல்" காரியாலயம்,

தபால் பெட்டி 26, கும்பகோணம் (S. I.)

இப்பகுதியில் நமது வாசகர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளுக்கு மட்டில் பத்திரிகையில் இடமிருக்கும் வரை பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் தங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி எழுதக்கூடாது. சட்டங்களிலோ, விதிகளிலோ ஏற்படக்கூடிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் முறையில்தான் கேள்விகள் இருக்கவேண்டும். கேள்விகள் சுருக்கமாய் இருக்கவேண்டும். கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில் **அபிப்பிராயமே.**

1. கேள்வி: (நடராஜ முதலியார்-திருத்துறைப்பூண்டி). ரெயில்வே ஸ்டேஷனுக்கு 100 கஜத்திற்குட்பட்ட பழக்கடைகள்-ஷாப் சட்டப்படி கடைதிறக்கும் நேரம் பூட்டும் நேரம் பற்றிய விதிகளிலிருந்து விதி விலக்களிக்கப்பட்டிருக்கின்றன. அப்படி யிருந்தும் பழங்களுடன் பீடி, சுருட்டு, தீப்பெட்டி போன்ற மற்றச் சாமான் சேர்த்து வியாபாரம் செய்யும் பழக் கடைகள் சட்டப்படி வாரத்தில் ஒரு நாள் மூடவேண்டுமோ? அப்படி மூடவேண்டுமென்றால் கடையை மூடி விட்டு, பழங்களை மட்டில் வெளியில் வைத்துவிற்பது குற்றமாகுமா?

பதில்: ரயில்லே ஸ்டேஷனுக்கு 100 கஜத்துக்குள் இருக்கும் எவ்விதக் கடைகளுக்கும் தினசரி திறந்து மூடும் மணி நேரத்தைப்பற்றிய விதி மட்டில் தான் கிடையாது. இக்கடைகளும் வாரத்தில் ஒரு நாள் மூடித்தான் ஆகவேண்டும். ஆனால் கடைகள் வாரத்தில் ஒரு நாள் மூடவேண்டுமென்ற விதியிலிருந்து, பழங்கள், வெற்றிலை வாழை இலை, முட்டை சோடா கலர் இவைகளைப் பிரதானமாய் வியாபாரம் செய்யும் கடைகள் எங்கே இருந்தாலும் மேற்கண்ட சாமான்கள் சம்பந்தப்பட்டவரையில் விதி விலக்கு அளிக்கப்பட் டிருக்கின்றன. (G. O. 1712—12-4-1949 தேதி கெஜட் பார்க்கவும்). ஆகையால் மேற்கண்ட விதிவிலக்கு அளிக்கப்பட்ட கடைகள் வாரத்தில் ஒரு நாள் மூடவேவேண்டியதில்லை. ஆனால் சாதாரணமாய் மூடவேண்டிய தினத்தன்று விதிவிலக்கு அளிக்கப்பட்ட பழம் முதலிய சரக்குகளைத்தான் விற்கலாம் என்று ஏற்படுகிறது. கடை திறந்திருந்தும் அன்று சுருட்டு, பீடி முதலிய வேறு சரக்குகளை விற்கக்கூடாது.

2. கேள்வி: (சின்னசாமி-சேலம்) மாதா மாதம் அல்லது வருடா வருடம் விற்பனை வரி கட்டி வரும் வியாபாரியின் கணக்குகளை, வியாபாரம் நடந்து வரும் நேரங்களில், விற்பனை வரி அதிகாரிகள் எடுத்துக்கொண்டு போக உரிமை உண்டா?

பதில்: இல்லை. விற்பனை வரிச்சட்டத்தின் 14 ஆவது செக்ஷன்படி:—(1) விற்பனை வரி அதிகாரிகள் ஒரு வியாபாரியின் கணக்குகளைத் தம் முன்கொண்டு வரும்படி உத்தரவிடலாம் (2) அல்லது அவ்வதிகாரிகள் வியாபாரியின் கடைக்கு வந்து கணக்குகளைச் சோதனை செய்து விட்டுப் போகலாம் (3) கணக்கு முதலியவற்றைச் சோதனை செய்ய மட்டில், அவர்கள் நியாயமான நேரங்களில், கடை முதலிய இடங்களுக்குள் நுழைய அவர்களுக்கு உரிமை உண்டு. இவை தவிர, கணக்குகளைத் தாமாக எடுத்துப் போக அவ்வதிகாரிகளுக்குச் சென்னை விற்பனை வரிச் சட்டத்தில் உரிமை இல்லை.

3. கேள்வி: (முத்து நல்லப்பா-செட்டிகுளம்) ஒருவருக்கு (இந்து) இரண்டு மனைவிகள். இருவருக்கும் பிள்ளைகள் இல்லாமல் இருந்து, கணவன் 1942இல் இறந்துவிட்டால், இறந்தவருடைய விவசாய நிலம் உள்பட உள்ள சொத்துக்கள் அவருடைய மனைவிகளுக்குப் பாத்தியமா? இறந்தவருக்குச் சகோதரி மகன் இருக்கிறார். அவருக்குப் பாத்தியமா?

பதில்: மனைவிகளுக்குத்தான் பாத்தியம். இவர்கள் ஆயுள்வரை இச்சொத்துக்களை அனுபவிக்கலாம். இருவரும் இறந்தபின், சொத்துக்கள் சகோதரி மகனுக்குப் போகும்.

4. கேள்வி: (கணேசன்-குலமாணிக்கம்.) இந்து ஒருவர், அனந்தர வார்சுகளில் ஒருவனை, தம் மனைவியின் அனுமதியின்றிச் சுவீகாரம் எடுத்துக்கொண்டு, மனைவிக்குச் சில சொத்துக்களைச் சகல சுதந்தர பாத்தியங்களுடன் எடுத்துக் கொள்ளும்படி கொடுத்துவிட்டு இறந்துபோனர். அவ்விதவைக்குப் பெண் இருக்கிருள். விதவை இறந்த பிறகு அவளுடைய சொத்து, பெண்ணுக்குப் பாத்தியமா? சுவீகாரமகனுக்குப் பாத்தியமா?

பதில்: பெண்ணுக்குத் தான் பாத்தியம்.

5. கேள்வி: (சுந்தரராவ்-கும்பகோணம்) தொழிற்சாலைச் சட்டத்தின் கீழ் வேலை செய்யும் சிப்பந்தி ஒருவர் சரியான காரணங்களுடன் நீக்கப்பட்டால், அவருடைய லீவு நாள் சம்பளத்துடன், உணவுக்கென்றும் ஒரு பகுதியும் சேர்த்து, அச்சிப்பந்திக்குக் கொடுக்க வேண்டுமா?

பதில்: கொடுக்க வேண்டும். (தொழிற்சாலைச் சட்டம் செக்ஷன் 79 (7); 80 பார்க்கவும்.)

6. கேள்வி: (A.T.M.T. கும்பகோணம்) மாவு மில்லில் அரிசி, கடலை, கோதுமை மூட்டையாக அரைத்தால், ரைஸ் மில்லுக்குள்ள சட்டம் மாவு மில்லுக்கும் உண்டா?

பதில்: ரைஸ் மில்களுக்கு மட்டும் சென்னை ரைஸ் மில் லைசென்சு உத்தரவு (1951) என்று ஒரு தனித்த கண்ட்ரோல் உத்தரவு இருக்கிறது. இது மாவுமில்களுக்குப் பொருந்தாது.

7. கேள்வி: (ரெங்கநாத ரெட்டியார்—புதுக்கோட்டை) திருவிதாங்கூர் — கொச்சி யூனியனுக்கு ஏற்றுமதி செய்யும் சரக்குகளுக்கு விற்பனை வரி உண்டா?

பதில்: கிடையாது.

8. கேள்வி: (கலந்தர் மெய்தின்—அமாடக்கி.) பஸ் போக்கு வரத்துள்ள நாட்டுப் புறத்திலுள்ள (டிஸ்டிரிக்ட் போர்டைச் சேர்ந்த) போது ரஸ்தாவில், கோழி, ஆடு, மாடு, நாய் பொன்ற கால் நடைகள் பஸ், லாரி, பிளஷர் முதலிய வாகனங்களால் அடிபட்டு இறந்தால் அல்லது அங்க வீனம் ஏற்பட்டால் அவ்வாகனங்களை ஓட்டிச் செல்லும் நபர் மீதோ, அல்லது அதன் சொந்தக்காரர்களின் மீதோ நடவடிக்கை எடுத்துக் கொள்ளச் சட்டத்தில் இடமுண்டா? அப்படியானல் எவ்வித நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம்?

பதில்: மோட்டார்கார் முதலிய வாகனங்களை அஜாக்கிரதையாக ஓட்டியதால் கால் நடைகளுக்கு விபத்து ஏற்பட்டால், மோட்டாரின் சொந்தக்காரர், கால் நடைகளின் சொந்தக் காரருக்கு, சட்டப்படி நஷ்ட ஈடு கொடுக்கக்கடமைப் பட்டவர். இதற்கு, சிவில் கோர்ட்டுகளில் தாவா செய்யலாம்.

9. கேள்வி: (சுப்பையன்--புதூர் உத்தமனூர்.) 1920இல் ஏற்பட்ட ஒரு போக்கியப் பத்திரத்தில் 3 வருடம் கெடுக் குறிப்பிட்டு அக்கெடுவுக்குள் போக்கியத் தொகை செலுத்தத் தவறிஞல் அதுவே சாசனமாகும் என்று குறிப்பிடப்பட் டிருக்கிறது. இப்பொழுது அந்தப் போக்கியத்தை மீட்க முடியுமா? முடியுமானல் தற்காலச் சட்டப்படி தள்ளுபடி உண்டா?

பதில்: 'கெடுவுக்குப்பின் அதுவே சாசனமாகும்' என்று எழுதி இருப்பது செல்லாது போக்கியம், போக்கியமாகவே தான் இருக்கும். அதை இப்பொழுது மீட்க முடியும். புதிய ஒத்தி சம்பந்தமான சட்டப்படி பரிகாரம் அடையக்கூடிய போக்கியமாக இருந்தால், அச்சட்டப்படி கழிவு அல்லது தள்ளுபடி ஏற்படும்.

10. கேள்வி: (தண்டாயுதம் — பழனி) பால் விற்பனை ஸ்தாபனங்களுக்கு விற்பனை வரி விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறதா? 1950 ஏப்ரல் முதல் பால் வியாபாரம் செய்பவர் கட்டிய வரியைத் திருப்பி வாங்க முடியுமா?

பதில்: எல்லாப் பால் விற்பனை ஸ்தாபனங்களுக்கும் விற்பனை வரி விதிவிலக்கு அளிக்கப்படவில்லை. 1-7-1949க்குப்பின் ஏற்பட்ட அல்லது இனி ஏற்படும் கூட்டுறவுப் பால் சப்ளை சங்கங்களுக்கும் கூட்டுறவுப் பால் சப்ளை யூனியன்களுக்கும் தான், அந்தந்தச் சங்கம் ஏற்பட்டது முதல் மூன்று வருடங்களுக்கு, விற்பனை வரி கிடையாதென்றும், விதிவிலக்குக் கொடுக்கப்பட் டிருக்கிறது. (G.O. (2333—23-10-1951 சென்னைச் சர்க்கார் கெஜட் - பாகம் I பக்கம் 1515 - பார்க்கவும்.)

11. கேள்வி: (செய்யது முகமது-கொழும்பு.) ஒரு கிராமம் பஞ்சாயத்துப் போர்டு அந்தஸ்தை அடைவதற்கு எத்தனை ஜனத் தொகை உள்ளதாக இருக்கவேண்டும்?

பதில்: குறைந்தது 500 ஜனங்களாவது இருந்தால், அந்தக் கிராமத்திற்குத் தனிப் பஞ்சாயத்து அமைத்துக் கொள்ளலாம். (சென்னைக் கிராமப் பஞ்சாயத்துச் சட்டம் - செக்ஷன் 3.)

PRINTED BY N. RAMARATNAM, M.A., B.L., AT THE MADRAS LAW JOURNAL BRANCH PRESS, TIRUBUVANAM, TIRUVIDAIMARUDUR, AND PUBLISHED BY R. NARASIMHAN, B.A., B.L., AT NO. 73, DABIR WEST STREET, KUMBAKONAM, FOR SOUTHERN BOOK HOUSE LTD, *Editor:*—V. S. VIJAYARAGHAVACHARI, B.A., B.L.

1952-ம் வருடத்தில்
சர்க்கார் விடுமுறை நாட்கள்

ஞாயிற்றுக்கிழமைகள்.

ஒவ்வொரு மாதமும் கடைசி சனிக்கிழமைக்கு முந்திய சனிக்கிழமை.

மாதம்.	தேதி.	கிழமை,	எதற்காக விடுமுறை,
ஜனவரி	1	செவ்வாய்கிழமை	இங்கிலீஷ் புது வருடப் பிறப்பு.
,,	7	திங்கள் கிழமை	வைகுண்ட ஏகாதசி.
,,	14	ஷை	பொங்கல்.
,,	15	செவ்வாய்கிழமை	மாட்டுப் பொங்கல்.
,,	26	சனிக்கிழமை	குடியரசு தினம்
பிப்ரவரி	23	சனிக்கிழமை	மஹா சிவராத்திரி.
மார்ச்சு	26	புதன்கிழமை	தெலுங்கு வருடப் பிறப்பு (மலையாள ஜில்லாவுக்கு இல்லை)
ஏப்ரல்	11	வெள்ளிக்கிழமை	குட்பிரைடே (புது வெள்ளி.)
ஜூன்	24	செவ்வாய்கிழமை	ரம்ஜான்.
ஆகஸ்டு	6	புதன்கிழமை	ஆவணி அவிட்டம்.
,,	15	வெள்ளிக்கிழமை	சுதந்தர தினம்.
செப்டம்பர்	1	திங்கள்கிழமை	பக்ரீத்.
,,	4	வியாழக்கிழமை	நாராயண குரு தேவ் தினம் (மலையாள ஜில்லாவுக்கு மட்டில் தான் விடுமுறை.)
,,	10	புதன்கிழமை	ஸ்ரீ ஜயந்தி
,,	18	வியாழக்கிழமை	மஹாலய அமாவாசை
,,	26	வெள்ளிக்கிழமை	ஆயுத பூஜை.
,,	27	சனிக்கிழமை	ஆயுத பூஜை.
,,	30	செவ்வாய்க்கிழமை	மொகரம்
அக்டோபர்	2	வியாழக்கிழமை	மஹாத்மா காந்தி பிறந்த நாள்.
,,	17	வெள்ளிக்கிழமை	தீபாவளி.
டிசம்பர்	1	திங்கள்கிழமை	மீலாடி நபி.
,,	25	வியாழக்கிழமை	கிருஸ்த்மஸ்.
,,	27	சனிக்கிழமை	வைகுண்ட ஏகாதசி.

(20-11-1951—சென்னை சர்க்கார் கெஜட்--பாகம் I—பக்கம் 1637.)

நாகரீக நூதன பார்டர்களில்
கண்ணைக் கவரும்
மனோகரமான வேலைப்பாடுள்ள
பட்டு ஜவுளி தினுசுகள்
குறைந்த விலையில் கியாரண்டியுடன்
கிடைக்குமிடம்
ராணி ரெங்கய்யர்
சன்ஸ்
கைத்தறி பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள்
கெருடலாயத் தெரு,
கும்பகோணம்.
பிராஞ்சு:—
20, லக்ஷ்மிபுரம் 2-வது தெரு,
மதுரை

பெங்களூர்
காஞ்சீபுரம்
கும்பகோணம்
பட்டுச் சேலைகள்
நூதன பார்டரில்
ஏராளமாக ஸ்டாக் செய்திருக்கிறோம்.
ரெங்கமூர்த்தி
கும்பெனி
கெருடலாயத் தெரு,
கும்பகோணம்.
பிராஞ்சுகள்:—
காரைக்குடி & நாட்டரசன்கோட்டை.

ஸ்தாபிதம் 1909. போன் நெ. 57 தந்தி விலாசம் "கோகுல்"

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

REGISTERED TRADE MARK

பிராஞ்சு: (மன்னார்குடி)

கூந்தலுக்கு வளர்ச்சியையும் மூளைக்கு குளிர்ச்சியையும்
கொடுப்பதில் நிகரற்ற

சந்தனாதித்தைலம், அரைக்கீரைவிதைத்தைலம்
கோகுல் கூந்தல் தைலம்

வாசனைப்பாக்கு, பல காய்கறி ஊறுகாய், ரோஜாப்பூ குல்கந்து, ஊதுவத்திகள்
பன்னீர் இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

SOLE AGENTS:

For Madras
SURAJ AGENCIES
MADRAS

For Coimbatore, Palghat & Nilgiris
B. BALAPATTABI CHETTIAR,
246. VYSYAL STREET, COIMBATORE.

PRINTED AT THE MADRAS LAW JOURNAL PRESS, TIRUBUVANAM, TDR.